04.12.15

# இன்றைய வேளாண் செய்திகள்

## நடப்பாண்டில் அமராவதி அணை நிரம்பியது! உபரி நீர் ஆற்றில் வெளியேற்றம்



உடுமலை: உடுமலை அமராவதி அணை நேற்று நிரம்பியது. இதையடுத்து, வினாடிக்கு, 4 ஆயிரம் கன அடி உபரி நீர் ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது. கரையோர மக்களுக்கு,வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

உடுமலை அமராவதி அணையின் நீர்பிடிப்பு பகுதிகள், மேற்குத்தொடர்ச்சி மலையில், 861 சதுர கி.மீ., பரப்பில் அமைந்துள்ளது. வடகிழக்கு பருவமழை காரணமாக, அணைக்கு முக்கிய நீர் வரத்து அளிக்கும், பாம்பாறு, தேனாறு, சின்னாறு ஆகிய ஆறுகளில், வரத்து அதிகரித்தது. அணையின் நீர் மட்டம், மொத்தமுள்ள 90, அடியில், 87 அடியை எட்டியதால், அணையிலிருந்து புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு, கடந்த மாதம், 30 ம் தேதி, தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. இருப்பினும், நீர் வரத்து குறித்து பொதுப்பணித்துறை

அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, 10:00 மணிக்கு மேல், அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. நள்ளிரவு 12:30 மணிக்கு, அணை முழு கொள்ளளவை எட்டியது; நீர் வரத்து வினாடிக்கு, 7,169 கன அடியாக அதிகரித்தது. அணை நிரம்பியதையடுத்து, மேல்மட்ட மதகுகள் வழியாக, 7,960 கன அடி தண்ணீர் உபரியாக அமராவதி ஆற்றில் திறந்து விடப்பட்டது. அமராவதி ஆற்றங்கரையோர கிராமங்களான கல்லாபுரம் உட்பட கிராமங்களுக்கு, வெள்ள அபாய எச்சரிக்கை, தண்டோரா மூலம் வழங்கப்பட்டது. நேற்று காலை நீர் வரத்து குறைந்ததால், உபரி நீர் வெளியேற்றமும் குறைக்கப்பட்டது. அணையிலிருந்து காலை, 7:00 மணிக்கு, நான்கு மதகுகள் வழியாக வினாடிக்கு, 4,897 கன அடி உபரி நீர் ஆற்றில் வெளியேற்றப்பட்டது. 2014, அக்டோபரில், அணை நிரம்பி வினாடிக்கு, 15 ஆயிரம் கன அடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்பட்டது. தற்போது வடகிழக்கு பருவமழை காரணமாக, அணை நிரம்பியுள்ளது. நீர் பிடிப்பு பகுதிகளில், மழை பெய்து வருவதால், பொதுப்பணித்துறையினர், தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று பகலில், அணைக்கு வினாடிக்கு, 2,406 கன அடி தண்ணீர் வரத்து இருந்தது.

**அதிகாரிகள் ஆய்வு**

அமராவதி அணை நிரம்பி, உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருவதால், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து திருப்பூர் கலெக்டர் கோவிந்தராஜ், வனத்துறை அமைச்சர் ஆனந்தன், மடத்துக்குளம் எம்.எல்.ஏ., சண்முகவேலு மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள், நேற்று ஆய்வு நடத்தினர்.

வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. கரையோர கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அக்குழுவினர் ஆய்வு செய்தனர்.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

வடகிழக்கு பருவமழை காலத்தில், அணை நிரம்பியுள்ளதால், ஆயக்கட்டு விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சம்பா பருவ நெல் சாகுபடிக்கு,

நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அணை நிரம்பி, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு உதவும் வகையில், உபரி நீர் ஆற்றிலும், புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு, பிரதான கால்வாயில் வினாடிக்கு, 440 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கிராமங்களுக்குள் ஆரணி ஆற்று வெள்ளநீர்**

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே உள்ள ஏ. ரெட்டிபாளையத்தில் ஆரணி ஆற்றனின் கரை உடைந்து அப்பகுதியில் உள்ள 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ளநீர் புகுந்துள்ளது.

**புதுச்சேரியில் தொடர்ந்து மிரட்டும் மழை: தண்ணீர் வடியாததால் மக்கள் சோகம்**

புதுச்சேரி,:புதுச்சேரியில் மழை தொடர்வதாலும், பல பகுதிகளில் தண்ணீர் வடியாமல் தேங்கி இருப்பதாலும், மக்கள் துயரம் நீடிக்கிறது. மீட்பு பணிக்காக, இரண்டு பேரிடர் மீட்பு குழு நேற்று புதுச்சேரி வந்தது.வடகிழக்கு பருவமழை மற்றும் வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால், புதுச்சேரியில் கடந்த ஒரு மாதமாக மழை நீடித்து வருகிறது.கடந்த நான்கு நாட்களாக வரலாறு காணாத மழை பெய்வதால் இந்திரா சிலை, லெனின் வீதி உள்ளிட்ட சாலைகளில் தண்ணீர் தேங்கியது. பூமியான்பேட்டை, கிருஷ்ணா நகர், ரெயின்போ நகர் உள்ளிட்ட பல பகுதிகளில், வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. நேற்று, ஓரளவு மறை நின்றிருந்த நிலையிலும், தண்ணீர் வடியாமல், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. 400க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.20 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாதித்துள்ளன. ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. 76 ஏரிகள் முழுமையாக நிரம்பி வழிகின்றன. பாதுகாப்பு மையங்களில், 2,000க்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழை நீடிக்கும் என்பதால், இன்று முதல் 6ம் தேதி வரை, புதுச்சேரி, காரைக்கால் அரசு மற்றும் தனியார் பள்ளி கல்லுாரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. பேரிடர் மீட்பு குழுபுதுச்சேரியில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபட, துணை கமாண்டர் பி.கே.தாஸ் தலைமையில், 71 பேர் அடங்கிய, இரண்டு பேரிடர் மீட்புக் குழுவினர், ஒடிசா மாநிலம்

புவனேஸ்வரில் இருந்து, நேற்று காலை புதுச்சேரி வந்தனர். மீட்பு நடவடிக்கைகள் குறித்து தலைமை செயலர் மனோஜ் பரிதா கூறியதாவது:நவீன கருவிகளுடன் புதுச்சேரி வந்துள்ள பேரிடர் மீட்பு குழுவினர், வெள்ளத்தால் அதிக பாதிப்பு உள்ள பகுதிகளில், மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபடுவர்.காரைக்காலில் கனமழை பெய்யும் என வானிலை அறிவித்துள்ளதால், அப்பகுதிக்கு ஒரு மீட்புக் குழு அனுப்பி வைக்கப்படும். மழையால் சாலைகள் அதிகளவில் சேதமடைந்துள்ளதால், மீட்பு பணியில் தொய்வு ஏற்படாத வகையில், விமானப் படையிடம், ஹெலிகாப்டர் ஒன்றும் கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**புதுச்சேரியில் கனமழை**

புதுச்சேரி: வடகிழக்கு பருவமழையால் புதுச்சேரியில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

## 5,000 கோழிக்குஞ்சுகள் மாயம்

திருவண்ணாமலை :-செய்யாறு அருகே, கோழிப்பண்ணைக்குள், ஏரி நீர் புகுந்ததால், 5,000 கோழிக்குஞ்சுகள், தண்ணீரில் அடித்து செல்லப்பட்டன.திருவண்ணாமலை மாவட்டத்தில், இரண்டு நாட்களாக பெய்த கனமழை காரணமாக, அனக்காவூர் ஏரி நிரம்பியுள்ளது. இதனால் ஏரியில் இருந்து, உபரி நீர் திறந்து விடப் பட்டுள்ளது; உபரி நீர், அப்பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதி, வயல் வெளிகளில் புகுந்தது; அருகில் உள்ள, கோழிப்பண்ணையிலும் புகுந்தது. அங்கிருந்த, 5,000 கோழி குஞ்சுகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

# 50 லட்சம் பேர் பாதிப்பு!

- சென்னையில் மேலும் பல பகுதிகளில் சூழ்ந்தது வெள்ளம்
- தண்ணீர் வெளியேற வழியில்லாததால் மீட்பு படை திணறல்

இடைவிடாது கொட்டித் தீர்த்த கனமழையால், சென்னையில், மேலும் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், 50 லட்சம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை சற்று குறைந்தாலும், தண்ணீர் வெளியேற வழியில்லாததால் மீட்புப் படை வீரர்கள் திணறி வருகின்றனர்.



தமிழகத்தில், எப்போதும் இல்லாத வகையில், வடகிழக்கு பருவ மழை, இடைவிடாது கொட்டித் தீர்த்தது. ஏரிகள் நிரம்பி, உபரி நீர் திறந்து விடப்பட்டதால், நிலைமை மிக மோசமானது. சென்னையில், பெரும்பாலான பகுதிகள், வெள்ளத்தில் மூழ்கின. தாம்பரம், முடிச்சூர், வண்டலூர், தாம்பரம், அண்ணா நகர், கிண்டி, சைதாபேட்டை, தி.நகர் என, சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் அனைத்தும் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. முதல் மாடி வரை

தண்ணீர் புகுந்து விட்டதால், அடுக்குமாடி வீடுகளில் வசிப்போரும், மொட்டை மாடிகளில், உதவிக்கு யாராவது வர மாட்டார்களா என, தவம் கிடக்கின்றனர்.

ஏரிகளில் உபரிநீர் திறப்பு அதிகரித்துள்ளதால், மணலி, திருவொற்றியூர், ஆவடி, திரு.வி.க. நகர், மாதவரம் என, வெள்ளம் புகுந்த பகுதிகளின் எண்ணிக்கை, நீண்டபடி உள்ளது. எழும்பூர் புதுப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகள் கூட தப்பவில்லை. சென்னையில், 90 சதவீத சாலைகளில் போக்குவரத்து முற்றிலும் முடங்கி விட்டது. இதனால், மக்கள் இடம் பெயர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய பேரிடர் மீட்புக் குழு, கடலோர காவல் படை, மாநில மீட்புப்படை, ராணுவம், கடற்படை என, மீட்புப் படைகள் குவிந்தாலும், நேற்று முன்தினம், மழை விடாததால், மீட்புப் பணிகளில் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை.

**50 லட்சம் பேர் பாதிப்பு:**

சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள, 12 லட்சம் வீடுகளில், 50 லட்சம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. சென்னையில், 25 லட்சம் பேரும், அதைச் சார்ந்த புறநகர் பகுதிகளில், 25 லட்சம் பேர் என, 50 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்; இதில், 10 லட்சம் பேர் வெள்ளத்தில் இருந்து, மீள முடியாமல் தவித்து வருகின்றனர். நேற்று மழை ஓரளவு விட்டதும், மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டன. ஆனால், வெள்ளம் வெளியேற எந்த வழியும் இல்லாததால்,

பணிகளை துரித கதியில் செய்ய முடியாமல், மீட்புப் படையினரும் தவித்து வருகின்றனர். தேசிய பேரிடர் மீட்புப் படையில், 30 குழுவினர், ஐந்து இன்ஜினியர்கள் கொண்ட குழு, தாம்பரம், முடிச்சூர், கொரட்டூர், பல்லாவரம், திருநீர்மலை, ஊரப்பாக்கம், மண்ணிவாக்கம், தி.நகர், கூடுவாஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளில், மீட்பு பணியில் ஈடுபட்டனர். நேற்று, 5,000 பேர் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, சென்னை விமான நிலையம் மூடப்பட்டு விட்டது. ரயில், பஸ் போக்குவரத்தும் முடங்கி விட்டது. மின் இணைப்பு துண்டிப்பால், மொபைல் போன் டவர்களும் செயல்

இழந்ததால், தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டு உள்ளது. இது, மீட்பு பணிக்கு பெரும் பின்னடைவாக உள்ளது. **இயல்பு நிலை எப்போது? :**

தற்போது மழை விட்டுள்ள நிலையில், ஏரிகளில் நீர் திறப்பு குறைந்துள்ளது. மழை பெய்யாவிடில், மீட்புப்பணிகள் வேகமாக நடக்கும். ஒரு வாரம், பத்து நாட்களில் சென்னை இயல்பு நிலைக்கு மாறிவிடும். ஆனால், வானிலை ஆய்வு மையம், 'இன்னும் மழை பெய்யும்' என, எச்சரித்துள்ளதால், வெகு சீக்கிரம் இயல்பு நிலைக்கு திரும்ப முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என, பேரிடர் நிவாரண மைய அதிகாரிகள் வெளிப்படையாக கூறினர்.

**அதிகம் பாதித்த பகுதிகள்:**

**தென்சென்னை:** மணப்பாக்கம், நந்தம்பாக்கம், ராமாபுரம், சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், எம்.ஜி.ஆர்., நகர், ஜாபர்கான்பேட்டை, நந்தனம், தி.நகர், வேளச்சேரி, அடையாறு, பெருங்குடி, துரைப்பாக்கம், மடிப்பாக்கம், மயிலாப்பூர்

**மத்திய சென்னை:** கொளத்துார், பெரம்பூர், கொரட்டூர், வில்லிவாக்கம், அண்ணாநகர், ராயப்பேட்டை, ஆயிரம் விளக்கு, எழும்பூர் புதுபேட்டை, மயிலாப்பூர்

**வடசென்னை:** திருவொற்றியூர், எண்ணுார், மணலி, புழல், சடையங்குப்பம், செங்குன்றம், தண்டையார்பேட்டை, கொடுங்கையூர், வியாசர்பாடி, ராயபுரம்.

**புறநகர் பகுதிகள்:** மேற்கு தாம்பரம், முடிச்சூர், வரதராஜபுரம், மேடவாக்கம், பெரும்பாக்கம், அனகாபுத்துார், பொழிச்சலுார், கவுல்பஜார், குன்றத்துார், திருமுடிவாக்கம், பழைய பெருங்களத்துார், மணிமங்கலம் பி.டி.சி., குவாட்டர்ஸ், மண்ணிவாக்கம்.

**ஆவின் பண்ணை மூடல்:**

வெள்ளம் புகுந்ததால், அம்பத்துார் பால் பண்ணை மூடப்பட்டுள்ளது.ஊழியர் வரத்து குறைவால், சோழிங்கநல்லுாரிலும் உற்பத்தி குறைந்து, ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. வடகிழக்கு பருவ மழையின் தீவிரத்தால், சென்னை மிதக்கிறது. இதன் தாக்கம் அம்பத்துாரையும் விட்டு வைக்கவில்லை.

## தமிழகம், புதுச்சேரியில் மீண்டும் மழை!



சென்னை : வடகிழக்கு பருவமழையால் தமிழகம், புதுச்சேரியில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. தற்போது தமிழகத்தில் சில இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை துவங்கியுள்ளது.கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளிலும், நாகை மாவட்டம் மயிலாடுதுறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளிலும் விடிய, விடிய கனமழை பெய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், திருவிடைமருதுார், பாபநாசம் உள்ளிட்ட பகுதிகளில் விடிய,விடிய மழை பெய்து வருகிறது. திருவாரூர்- திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, நன்னிலம் குடவாசல் உள்ளிட்ட பகுதிகளில், நள்ளிரவு முதல் சாரல் மழை பெய்து வந்த நிலையில், தற்போது கனமழை துவங்கியுள்ளது. புதுச்சேரியிலும் தற்போது கனமழை பெய்து வருகிறது.

## தமிழகத்திற்கு மேலும் ரூ.1,000 கோடிபிரதமர் நரேந்திரமோடி அறிவிப்பு



சென்னை:தமிழக வெள்ள நிவாரணம் மற்றும் மீட்பு பணிக்கு உடனடியாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதாக பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்தார்.

ஏற்கனவே 940 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.மழை வெள்ளத்தால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூார் மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளன.நவ.,8 முதல் பெய்த மழையில் 8,841 கோடி ரூபாய்க்கு சேதம் ஏற்பட்டது. 'இடைக்கால நிவாரணமாக உடனடியாக 2,000 கோடி ரூபாய் வழங்க வேண்டும்' என, முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதினார். அதைத் தொடர்ந்து உடனடியாக 940 கோடி ரூபாயை பிரதமர் ஒதுக்கினார். கடந்த சில தினங்களாக பெய்த மழையில் சென்னை தனித்தீவானது. நேற்று காலை முதல்வர் ஜெயலலிதா ஹெலிகாப்டரில் சென்று சேதப் பகுதிகளை பார்வையிட்டார். மதியம் ராணுவ விமானத்தில் பிரதமர் நரேந்திரமோடி அரக்கோணத்தில் உள்ள கடற்படை விமான தளத்திற்கு வந்தார்.

அங்கிருந்து மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் உடன், ராணுவ ஹெலிகாப்டரில் காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்டங்களில், வெள்ள சேதத்தை பிரதமர் மோடி பார்வையிட்டார். பின் தலைமைச் செயலகம் அருகே உள்ள ஐ.என்.எஸ்., ஹெலிகாப்டர் இறங்கு தளத்திற்கு வந்தார்.அவரை கவர்னர் ரோசய்யா, முதல்வர் ஜெயலலிதா வரவேற்றனர். அங்கு பத்திரிகையாளர்களிடம் பிரதமர் மோடி பேசும்போது "தமிழக மக்களுக்கு உறுதுணையாக இருப்பேன்," என, தமிழில் கூறினார். பின் ஆங்கிலத்தில் அவர் கூறியதாவது:மழை சேதங்களை, மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணனுடன், ஹெலிகாப்டரில் சுற்றி பார்த்தேன்.அளவுக்கு அதிகமான மழையால், பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தமிழக மக்களுக்கு, இந்திய மக்கள் துணை நிற்கின்றனர். தமிழக வெள்ள நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைக்கு உடனடியாக 1,000 கோடி ரூபாய் விடுவிக்க உத்தரவிட்டுள்ளேன். ஏற்கனவே 940 கோடி ரூபாய் விடுவிக்கப் பட்டுள்ளது, என்றார்.

மேலும் பிரதமர் மோடி 'டுவிட்டர்' இணைய தளத்தில் 'தமிழக மக்களின் தேவையை பூர்த்தி செய்ய மத்திய அரசு தோள் நிற்கும்' என, குறிப்பிட்டுள்ளார்.

**பிரதமரிடம் முதல்வர் கோரிக்கை :**

தமிழகவெள்ள நிவாரண நடவடிக்கைக்கு குறைந்தபட்சம் 5,000 கோடி ரூபாயை உடனடியாக வழங்க வேண்டும்' என பிரதமர் மோடியிடம் முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்தார். நேற்று தமிழகம் வந்த பிரதமரிடம் முதல்வர் ஜெயலலிதா கூறியதாவது:தமிழகத்தின் வட கடலோர மாவட்டங்கள், மழையால் ஸ்தம்பித்துள்ளன. சென்னையில், 1918க்கு பிறகு அதிகபட்ச மழை பெய்துள்ளது. மீட்பு மற்றும் நிவாரண பணி நடந்து வருகிறது.மக்களை மீட்க முப்படையினர், தேசிய பேரிடர் மேலாண்மை படையினரை அனுப்பியதற்கு நன்றி.மேலும் கூடுதலாக 10 குழு ராணுவ வீரர்கள், 20 குழு தேசிய பேரிடர் மேலாண்மை படையினரை அனுப்ப வேண்டும்.'வெள்ளத்தால் 8,841 கோடி ரூபாய் சேதம்அடைந்துள்ளது. உடனடியாக 2,000 கோடி ரூபாய் விடுவிக்க வேண்டும்' என நவ., 23ல் உங்களுக்கு மனு அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து தாங்கள், 940 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கு நன்றி.அதில் 2014 - 15ல், மாநில பேரிடர் நிதிக்கு வர வேண்டிய 133 கோடி ரூபாய்; நடப்பு ஆண்டுக்கான, 255 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை ஏற்கனவே மாநில அரசு நிதியில் இருந்து செலவழிக்கப்
பட்டுள்ளது. மேலும், 552 கோடி ரூபாய், 14வது நிதிக்குழு திட்டம் பரிந்துரை செய்த சிறப்பு திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணப்பணிக்கு வழங்கப்படவில்லை.எனவே, வெள்ள நிவாரண நிதிக்காக, தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து உடனடியாக 5,000 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும்.ஏற்கனவே சேத மதிப்பு குறித்து மனு அளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரும் பெய்த மழையால் சேதம் ஏற்பட்டுள்ளதால் மேற்கொண்டு ஏற்பட்ட சேதங்களை கணக்கிடும் பணி நடந்து வருகிறது. இது தொடர்பான மனு விரைவில் மத்தியஅரசுக்கு அனுப்பப்படும்.இவ்வாறு முதல்வர் தெரிவித்தார்.

மேலும் ஒரு காற்று அழுத்த தாழ்வு



சென்னை: வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள புதிய காற்று அழுத்த தாழ்வு நிலையால் டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில், கனமழை பெய்யும்' என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.வானிலை மைய இயக்குனர் ரமணன் நேற்று கூறியதாவது: தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கைக்கும் வட தமிழகத்துக்கும் இடையே, இரு நாட்களுக்கு முன் நிலை கொண்டிருந்த காற்று அழுத்த தாழ்வு மறைந்து விட்டது. தற்போது அதே இடத்தில், புதிய காற்று அழுத்த தாழ்வு உருவாகி உள்ளது. இதனால், தமிழக டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மாநிலம், காரைக்கால் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கனமழை பெய்யும்.சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உண்டு.நேற்று காலை, 8:30 மணி வரை தமிழகத்தில் அதிகபட்சமாக, கடலூர் - 13; விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் - 12; மதுரை மாவட்டம், பெரியாறு - 11; திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் - 9 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். மீண்டும், 50 செ.மீ., மழை?'சென்னை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில், அடுத்த இரு நாட்களில், மீண்டும் 50 செ.மீ., மழை பெய்யும்' என தனியார் வானிலை மையங்கள் எச்சரித்துள்ளன.ஓய்வு பெற்ற வானிலை ஆய்வு மைய இயக்குனர் ஒய்.இ.ஏ.ராஜ் கூறியதாவது: இரு தினங்களுக்கு முன் தாம்பரத்தில் 49 செ.மீ.,

மழையும், சென்னை மற்றும் பிற சுற்றுப் பகுதிகளில், 29 - 36 செ.மீ., மழையும் பெய்தது, மிக அதிகபட்சமானது. இதுபோன்ற நிலை எதிர்பாராமல் நடப்பது. மீண்டும் இதேபோல மழை பெய்யுமா என்பதை கணிக்க முடியாது. தற்போது நிலவும் வானிலை நிலவரப்படி, மீண்டும் மிக கனமழைக்கு வாய்ப்பு குறைவாகவே உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கிச்சடி, தயிர் சாதம் தான் தற்போதைய சிறந்த உணவு!**

சென்னை நகர மக்களில் பெரும்பான்மையானோர் வெள்ளத்தில் சிக்கி இருந்தாலும், வெள்ளத்தில் இருந்து மீண்ட மக்களுக்கு, இன்னும் பீதி அடங்கவில்லை. தற்போது சூழ்ந்துள்ள வெள்ளம் வடிய, மேலும் சில நாட்களாகும் என்ற நிலை காணப்படுகிறது. இந்த சூழ்நிலையில், பொதுமக்கள் பாதுகாப்புடன் இருக்க, எந்த வகையான உணவை சாப்பிட வேண்டும் என்ற கேள்வி எழுந்துள்ளது.இதுகுறித்து, சென்னை, அரசு பொது மருத்துவமனை மருந்தி யல் துறை தலைவர் ரகுநந்தன் கூறியதாவது:சென்னை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதன் பிடியில் இருந்து, மக்கள் மீள வேண்டும். மழை காலத்தில், குடிநீர், உணவு, பூச்சி, கொசுக்களால் நோய் பரவ வாய்ப்புள்ளது. பொதுமக்கள் விழிப்போடு இருக்க வேண்டும். தண்ணீரில் குளோரின் அளவு சரியாக இருப்பது முக்கியம். எந்த குடிநீராக இருந்தாலும், அவற்றை நன்கு காய்ச்சி, ஆற வைத்து குடியுங்கள்; 'கேன்' குடிநீராக இருந்தாலும், இதுபோன்ற நேரங்களில் காய்ச்சி குடிப்பது அவசியம்.சூடான, அவ்வப்போது தயாரித்த உணவுகளை மட்டும் சாப்பிடுங்கள். பழைய உணவு களை கண்டிப்பாக சாப்பிட வேண்டாம். அசைவ உணவுகளை தவிர்ப்பது நல்லது. சாலையோர கடைகள், 'பாஸ்ட்புட்' கடைகளில் சாப்பிட வேண்டாம். பிரத்யேக, 'டயட்' ஏதும் இல்லை. குறிப்பாக, கிச்சடி, சாம்பார் சாதம், தயிர்சாதம், புளியோதரை, சப்பாத்தி போன்ற உணவுகளை சாப்பிடலாம். உணவில் அதிகமாக மசாலா, வாசனைக்கான பொருட்கள் சேர்த்து சமைத்தல் கூடாது. வெள்ளத்தில் இருந்து மீண்ட மக்கள், குடிநீர் தொட்டிகளை நன்கு சுத்தம் செய்துவிட்டு, தண்ணீர் நிரப்பி வைப்பது நல்லது. வெளியில் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாமல்

சென்றால், வீடு திரும்பியதும் கை, கால்களை நன்கு தண்ணீரில் கழுவ வேண்டும். காலில் புண் ஏற்படும் என்பதால், ஈரப்பதம் இல்லாத வகையில், கால்களை நன்கு துடைத்து விடுங்கள். வயதானோர், ஆஸ்துமா நோயாளிகள், கர்ப்பிணிகள் இந்த நேரத்தில் மிகுந்த கவனத்துடன் இருப்பது நல்லது.இவ்வாறு அவர் கூறினார்.

**இயற்கை முறையில் பாகற்காய் சாகுபடி: பாரம்பரியம் மறக்காத கிராமம்**



ராமநாதபுரம்: ராமநாதபுரம் அருகே நைனாமரைக்கான் கிராமத்தில் விவசாயிகள் அனைவரும் இயற்கை முறையில் நாட்டு ரக பாகற்காய் சாகுபடி செய் கின்றனர்.இப்பகுதியில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாகற்காய் சாகுபடி செய்கின்றனர். அப்பகுதியை சேர்ந்த நாட்டு ரகங்களையே பயிடுகின்றனர். இவற்றிற்கு கொலுஞ்சி, கால்நடை சாணம் மட்டுமே உரமாக இடப்படுகிறது. சிலர் மண்புழு உரத்தை பயன்படுத்துகின்றனர். ரசயன உரத்தை பயன்படுத்துவதில்லை. இங்கு விளையும் காய்கள் அளவில் பெரிதாக இருக்கும்.பாரம்பரியமாகவும், இயற்கை முறையிலும் நைனாமரைக்கான் பாகற்காய் விளைவதால், ராமநாதபுரம் பகுதி மக்கள் விரும்பி வாங்குகின்றனர்.விவசாயி ஆனந்தன் கூறுகையில், “25 சென்ட்டில் பாகற்காய் சாகுபடி செய்துள்ளேன். மூன்று மாதங்களில் காய்களை பறிக்கலாம். 1,200 கிலோ வரை கிடைக்கும். ரூ.40 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை லாபம்

கிடைக்கும். அடுத்த சாகுபடிக்கு தேவையான விதைகளை, பாகற்காய்களை பழுக்க வைத்து எடுத்து கொள்ளோம்," என்றார்.

**தமிழக அரசு இணையதளம் முடக்கம்**

சென்னை :தமிழக அரசு இணையதளம் நேற்று முடங்கியது.சென்னையில் மழை வெள்ளம் காரணமாக, மொபைல் போன் இணைப்புகள் செயல் இழந்துள்ளன. தமிழக அரசின் அதிகாரப்பூர்வ இணைய தளமும் நேற்று இயங்கவில்லை. இதனால், அரசு செய்திக்குறிப்புகளை மக்கள் பார்க்க இயலவில்லை. இதேபோல், பெரும்பாலான இணையதளங்களை, மக்கள் நேற்று பார்க்க இயலவில்லை.

**வெள்ளத்தில் மிதக்கும்அரசு அலுவலகங்கள்**

கன மழையால், மாற்றுத்திறனாளிகள் துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட, அரசு அலுவலகங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.சென்னை, கே.கே.நகரில், மாற்றுத்திறனாளி நலத்துறை இயக்குனரகம்; கிண்டி, திரு.வி.க., தொழிற் பேட்டையில் சமூக நலம், சத்துணவு திட்ட அலுவலகங்கள் செயல்படுகின்றன. கன மழையால், மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்திற்குள் வெள்ள நீர் புகுந்தது. பல அடி உயரத்திற்கு தேங்கி உள்ள தண்ணீரால், அலுவலகத்தில் இருந்த மருத்துவ உபகரணங்கள் சேதம் அடைந்தன. அடையாறு ஆற்றின் வெள்ள பெருக்கால், சமூக நலத்துறை அலுவலகத்தில் தண்ணீர் புகுந்து, முக்கிய ஆவணங்கள் நனைந்து உள்ளன.

**மொபைல் போன் டவர்கள்டீசல் பற்றாக்குறையால் 'அவுட்'**

சென்னையில், டீசல் பற்றாக்குறையால் மொபைல் போன் டவர்கள் செயல்பாடுகளை இழந்தன.சில நாட்களாக பெய்து வரும் கன மழையினால், பல இடங்களில் மின் தடை ஏற்பட்டுள்ளது. அதனால், சென்னையில் உள்ள, 2,000 மொபைல் போன் டவர்களில், 1,000 டவர்கள் பாதிக்கப்பட்டன. இதனால், பல இடங்களில் மொபைல் போன் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, பல இடங்களில் டீசல் ஜெனரேட்டர் மூலம் நிலைமை

சமாளிக்கப்பட்டது. ஆனால் நேற்று, டீசல் தட்டுப்பாடு அதிகரித்ததால், மொபைல் போன் டவர்கள் முற்றிலும் செயலிழந்தன. இதனால், பெரும்பாலான பகுதிகளில் மொபைல் போன் இணைப்பும் செயலிழந்தது.- நமது நிருபர் -

**செம்பரம்பாக்கத்தில் 47.5 செ.மீ., மழை**

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், நேற்று, காலை 6:00 மணி நிலவரப்படி, 386.6 செ.மீட்டர் மழை பதிவாகியது.அதில், அதிகபட்சமாக செம்பரம்பாக்கத்தில் 47.5 செ.மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக, ஆர்.கே.பேட்டையில் 6.3 செ.மீட்டரும் பதிவாகி உள்ளது.

**தமிழகத்தில் தொடர் மழை எதிரொலி: அரிசி உற்பத்தி பாதிப்பால் விலை கிடுகிடு.**

சேலம்: தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையால், அரிசி ஆலைகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கிலோவுக்கு, இரண்டு ரூபாய் முதல், நான்கு ரூபாய் வரை, விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் அக்.,26ல் துவங்கி வடகிழக்கு பருவ மழை, நவ.,8 முதல் அடைமழையாக உருவெடுத்துள்ளது. அதிலும், அரிசி உற்பத்தி அதிக அளவில் நடக்கும், செஞ்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி பகுதியில் தொடர் மழையும், சேலம், ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோவில், காங்கேயம் பகுதிகளில் அவ்வப்போதும் மழை பெய்து வருகிறது. வரத்து சரிவு: தமிழகத்தில் செயல்பட்டு வந்த, 7,400 அரிசி ஆலைகளில், 10 சதவீதம், 765 நவீன ஆலைகளில் மட்டும், தங்கு தடையின்றி அரிசி உற்பத்தி நடந்து வருகிறது. தமிழகத்தின் மார்க்கெட்டுக்களுக்கு விற்பனைக்கு வரும் அரிசி வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில், தற்போது பெய்து வரும் மழையால், ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் கடும் சேதம் ஏற்பட்டு உள்ளது. மேலும், தொடர் மழையால், நடப்பாண்டில் தமிழகத்தில் நெல் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகி உள்ளது.

விலை உயர்வு: ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களும், புயலின் தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பதால், அங்கிருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் நெல் வரத்தும் குறையத் துவங்கி உள்ளது. தமிழகத்தில் அரிசி விலை, கிலோவுக்கு, இரண்டு ரூபாய் முதல், நான்கு ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

சேலம் மாவட்ட அனைத்து வணிகர்கள் சங்க, பொதுச் செயலாளர் ஜெயசீலன் கூறியதாவது: நடப்பாண்டு அளவுக்கு அதிகமாக மழை பெய்த போதிலும், அதனால் எந்த பயனும் இல்லாத நிலையே ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் பெய்து வரும் மழையால், செஞ்சி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்களில், அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. விலை, கிலோவுக்கு, இரண்டு ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதே நிலை தொடர்ந்தால், அரிசி விலை மேலும் உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாய நிலங்களில் ஊற்று: 500 ஏக்கர் மஞ்சள் அழுகியது**

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை ஒன்றியம் மெட்டாலா, உரம்பு, முள்ளுக்குறிச்சி பகுதிகளில் தொடர் மழையால் வேளாண் நிலங்களில் ஊற்றெடுத்துள்ளது. இதனால், இப்பகுதியில் பயிரிட்டுள்ள, 500 ஏக்கர் மஞ்சள் பயிர் அழுகியுள்ளது. நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில், 3,750 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த, 20 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், பெரியகோம்பை, முள்ளுக்குறிச்சி, மெட்டாலா, உரம்பு ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலத்தில் இருந்து மழைநீர் ஊற்றாக வெளியேறி வருகிறது. பல இடங்களில் வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால், 500 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் அழுகும் நிலையில் உள்ளது. உரம்பு பகுதியை சேர்ந்த விவசாயி பாலசுப்ரமணி, 7 ஏக்கரில் மஞ்சள் பயிரிட்டுள்ளார். கடந்த வாரம் வரை இவரது வயலில் மழைநீர் தேங்கி நின்றதால், 3 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் அழுகியது.

இது குறித்து பாலசுப்ரமணி கூறியதாவது: பத்து மாத பயிரான மஞ்சளில் தற்போது, கிழங்குகள் முளைவிட்டு பெரிதாகும் நிலையில் உள்ளன. கடந்த சில வாரங்களாக பெய்த மழையால், வயல்களில் ஊற்று எடுக்க தொடங்கி விட்டது. மழைநீரை வாய்க்கால் மூலம் வெளியேற்றினாலும் கூட, தண்ணீர் தேங்கிய

இடத்தில் உள்ள மஞ்சள் அழுகிவிட்டது. மஞ்சள் கிழங்கின் அடியில் உள்ள அனைத்து வேர்களும் அழுகிவிட்டன. மஞ்சள் சாகுபடி செய்ய, ஏர் ஓட்டியது, விதை மஞ்சள், பார் பிடித்தது, உரம் என ஏக்கருக்கு, 80 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஏக்கருக்கு, 3.5 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து, கடந்த வாரம் மங்களபுரம் கிராம நிர்வாக அலுவலர், நாமகிரிப்பேட்டை தோட்டக்கலைத்துறை அலுவலர்களிடம் புகார் தெரிவித்தேன். ஆனால், அவர்கள் இதுவரை ஆய்வு செய்ய வரவில்லை. தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், உடனடியாக சேத மதிப்பீடு செய்து விவசாயிகளுக்கு இழப்பீடு பெற்று தரவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**தும்பலஹள்ளி அணைக்கு நீர் வரத்து: விவசாயிகள் மகிழ்ச்சி**

காரிமங்கலம்: காரிமங்கலம் அடுத்த தும்பலஹள்ளி அணைக்கு, 10 ஆண்டுகளுக்கு பின், தற்போது நீர் வரத்து துவங்கியுள்ளது. இதனால், அணை பாசன விவசாயிகள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், தும்பலஹள்ளி, வாணியாறு, தொப்பையாறு உட்பட, எட்டு அணைகள் உள்ளன. அதில், தும்பலஹள்ளி அணை தவிர, மற்ற, ஏழு அணைகளில், குறிப்பிடத்தக்க வகையில் ஆண்டு தோறும் தண்ணீர் வரத்து இருந்தது. ஆனால், கடந்த, 10 ஆண்டுகளாக, தும்பலஹள்ளி அணை தண்ணீர் வரத்து இன்றி, வறண்டு காணப்பட்டது. இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகள், தும்பலஹள்ளி அணைக்கு, கிருஷ்ணகிரி மாவட்டம், எண்ணேகோல் புதூரில் இருந்து, தென்பெண்ணை ஆற்று உபரி நீரை, கால்வாய் மூலம் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்ற, தமிழக அரசுக்கு தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில், கடந்த, ஒரு மாதமாக பெய்து வரும் கன மழை காரணமாக, பஞ்சப்பள்ளி அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி, உபரி நீர் சின்னாற்றில் திறந்து விடப்பட்டது. மேலும், சின்னாற்றில் வரும் உபரி நீர், மழை நீர் காரணமாக ஜெர்தலாவ் உட்பட பல்வேறு ஏரிகள் நிரம்பி, அதில் இருந்து வரும் உபரி நீர், தற்போது,

தும்பலஹள்ளி அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. தற்போது, தும்பலஹள்ளி அணையில், 5 அடி அளவிற்கு தண்ணீர் வந்துள்ளது. தொடர்ந்து அணைக்கு தண்ணீர் வரத்துள்ளதால், விரைவில் அணையில் முழு கொள்ளளவை எட்டும் என, விவசாயிகள், நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பத்து ஆண்டுகளுக்கு பின், தும்பலஹள்ளி அணைக்கு தற்போது, தண்ணீர் வந்துள்ளது, விவசாயிகள், பொதுமக்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

**வெலகலஹள்ளி ஆற்றில் நீர் வரத்து அதிகரிப்பு**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த வெலகலஹள்ளி ஆற்றில், 12 ஆண்டுகளுக்கு பிறகு நீர் வரத்து உள்ளதால், அந்த பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி ராயக்கோட்டை சாலையில் உள்ளது வெலகலஹள்ளி கிராமம். இந்த கிராமத்தைச் சுற்றிலும், காப்புகாடு பகுதிகள் அதிகம் உள்ளது. மாவட்ட எல்லையில் அமைந்துள்ள இந்த கிராமத்தில், வெலகலஹள்ளி சிற்றாறு உள்ளது. காப்புகாடுகளில் மழை பெய்யும் போது, இந்த ஆற்றில் தண்ணீர் வரத்து இருக்கும். இதனால், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, இந்த கிராமத்தை சுற்றியுள்ள பகுதியில், வாழை, கரும்பு, தக்காளி மற்றும் பூக்கள் ஆண்டுதோறும் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில், கடந்த, 12 ஆண்டுகளாக, இந்த பகுதியில் மழை பொய்த்துப் போனதால், வெலகலஹள்ளி ஆறு தண்ணீர் இல்லாமல் வறண்டு போனது. இந்நிலையில், வெலகஹள்ளியைச் சுற்றியுள்ள தர்மபுரி மாவட்டத்தில் உள்ள மகேந்திரங்கலம், மதகேரி, மாரவாடி, ஊதன்கொட்டாய், தொட்டப்பள்ளம் ஆகிய சுற்றுவட்டார பகுதியில் உள்ள வனப்பகுதியில், கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால், வெலகலஹள்ளி சிற்றாறில் தற்போது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த ஆற்றில் வரும் தண்ணீர், பாசிப்பட்டி, நக்கல்பட்டி, ஆலபட்டி, பெல்லாரம்பள்ளி வழியாக கே.ஆர்.பி., அணையில் கலக்கிறது. 12 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆற்றில் தண்ணீர் வந்துள்ளதால், ஆறு செல்லும் வழியில் உள்ள, 20க்கும் மேற்பட்ட கிராமங்களில், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து வெலகலஹள்ளியை சேர்ந்த விவசாயி திம்மராஜ் கூறியது: வெலகலஹள்ளி ஆறு வறண்டு போனதால் எங்கள் பகுதியில் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்நிலையில், 12 ஆண்டுகளுக்கு பிறகு ஆற்றில் தண்ணீர் வந்துள்ளதால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. வறண்டு போன போர்வெல்களிலும் தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## க.பரமத்தியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: கரூர் மாவட்டம் முழுவதும் நேற்று காலை முதல் மேக மூட்டமாக காட்சியத்தாலும், க.பரமத்தி யூனியனில் மட்டும் அதிகளவாக, 32.4 மி.மீட்டர் மழைப்பதிவானது. கரூர் மாவட்டம் முழுவதும், நேற்று முன்தினம் மாலை 4 மணி முதல், நேற்று காலை 8 மணி வரை பெய்த மழையளவு விவரம்: க.பரமத்தியில் 32.4 மி.மீட்டர் மழையும், அரவக்குறிச்சியில் 0.4 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது. கரூர் மாவட்டத்தில், தோகமலை, மயிலம்பட்டி, க.பரமத்தி, பஞ்சப்பட்டி, பாலவிடுதி, கடவூர், கரூர், அரவக்குறிச்சி, அணைப்பாளையம், குளித்தலை, மாயனூர், கிருஷ்ணராயபுரத்தில் மழையளவு பதிவு மையம் செயல்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டமாக காட்சியளித்தது.

## அழகாபுரி அணைக்கு17 அடி தண்ணீர் வரத்து

வேடசந்தூர்:வேடசந்தூர் அருகே உள்ள அழகாபுரி அணைக்கு, 17 அடி தண்ணீர் வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.வேடசந்தூர் தாலுகா பகுதியில், போதிய மழை பெய்யாததால், கிணறுகளுக்கு இன்னும் புதிய நீர் வரத்து ஏற்பட வில்லை. ஆனாலும் அவ்வப்போது லேசான மழை பெய்து வருவதால், இப்பகுதி பசுமை யாக உள்ளது. அதே அளவிற்கு மானாவாரி விவசாயமும் நடந்து வருகிறது. ஆத்துரில் உள்ள அணை நிரம்பியதால், கூடுதல் தண்ணீர் குடகனாற்றில் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக வந்ததால், பத்து அடி தண்ணீர் மட்டுமே தேங்கியிருந்த அழகாபுரி குடகனாறு அணையில், தற்போது 17.26 அடி

தண்ணீர் தேங்கியுள்ளது. அணையின் கொள்ளளவு, 26 அடி என்பதால், இந்த ஆண்டு அணை நிரம்பும் என, ஆவலோடு காத்திருக்கின்றனர்.

**வாலிநோக்கத்தில்79 மி.மீ., மழை**

ராமநாதபுரம்; சாயல்குடி அருகே வாலிநோக்கத்தில் 79 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பதிவான மழையளவு (மி.மீ.,): கமுதி 21, முதுகுளத்தூர் 69.02, கடலாடி 66, வாலிநோக்கம் 79, மொத்தம் 235.02.

**ராமநாதபுரம் பெரிய கண்மாயில்6 அடிக்கு தண்ணீர் நிரப்ப வலியுறுத்தல்**

ராமநாதபுரம்: ராமநாதபுரம் பெரிய கண்மாயில் 6 அடிக்கு தண்ணீர் நிரப்ப வேண்டுமென, விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். ராமநாதபுரம் பெரிய கண்மாய் மூலம் 3,962 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதில் நேரடி விதைப்பு மூலம் 3 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த கண்மாய் நீரை பயன்படுத்தி தொருவளூர், கவரங்களம், பாப்பாகுடி, களத்தாவூர், இடையர்வலசை, சூரன் கோட்டை, புத்தேந்தல் ஆகிய கிராமங் களிலும் நன்செய், புன்செய் நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தூர்வாரப் படாததால் கண்மாயில் மண் மேவி யுள்ளன. சீமைக்கருவேல மரங்களும் ஆக்கிரமித்துள்ளன. இதனால் கொள்ளளவின் பாதியளவு நீருக்கே கண்மாய் நிரம்பிவிடும் நிலை உள்ளது. எனவே வைகை நீரை கண்மாயில் 6 அடி அளவிற்கு தண்ணீர் நிரப்ப வேண்டுமென, விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். பெரியகண்மாய் நீரினை பயன்படுத்து வோர் சங்கத் தலைவர் பாலசுந்தரமூர்த்தி கூறியதாவது: வைகை நீரை நம்பி பெரிய கண்மாய் பாசனத்திற்குட்பட்ட 3 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கண்மாயில் மண், சீமைக்கருவேல மரங்கள் ஆக்கிரமித்துள்ளதால் தண்ணீரை 6 அடிக்கு நிரப்பினால் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும். கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளோம். விவசாயிகளும் கண்மாய் நீரை முறையாக பயன்படுத்த வேண்டும். புதிதாக

சாகுபடி செய்ய உள்ளோர் குறுகிய கால பயிர்களை பயிரிட வேண்டும், என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கடலூர், டெல்டா மாவட்டங்களில் மிக பலத்த மழைக்கு வாய்ப்பு**



வங்கக் கடல் பகுதியில், கடந்த சில நாள்களாக நிலவிய காற்றழுத்தத் தாழ்வு நிலை, வியாழக்கிழமை வலுப்பெற்று காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது. இந்த நிகழ்வின் காரணமாக, காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் கடலூர், காரைக்கால் பகுதிகளில் மிக பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் வியாழக்கிழமை கூறியதாவது: வங்கக் கடல் பகுதியில், கடந்த சில நாள்களாக நிலவி வரும் காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறி உள்ளது. தற்போது, இலங்கை, வட தமிழகம்

ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக நிலை கொண்டுள்ளது. இந்த நிகழ்வின் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பதிவாகியுள்ளது. பலத்த, மிக பலத்த மழைக்கு வாய்ப்பு: அடுத்த 24 மணி நேரத்தில், கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழையை எதிர்பார்க்கலாம். வட கடலோர மாவட்டங்களில், ஒரு சில இடங்களில் பலத்த, மிக பலத்த மழை இருக்கும். மிக பலத்த மழை எச்சரிக்கை: கணினி சார்ந்த கணிப்புகள்படி, டெல்டா மாவட்டங்கள், கடலூர், காரைக்கால் ஆகிய இடங்களில், ஓரிரு இடங்களில் மிக பலத்த மழை பெய்வதற்கு வாய்ப்புண்டு. தென் கடலோர மாவட்டங்கள், உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த மழை இருக்கும். அதாவது, அந்தப் பகுதிகளில் 250 மி.மீட்டர் அளவுக்கும் மேல் மழை பெய்யும் வாய்ப்பு இருக்கிறது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, பொதுவாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாநகரில் விட்டு விட்டு மழை இருக்கும். நகரில் ஓரிரு முறை பலத்த மழை பெய்யவும் வாய்ப்புண்டு. தென்தமிழகம், புதுச்சேரி, வட தமிழகம், தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில், தென்கிழக்கு, வடகிழக்கு, கிழக்கு ஆகிய திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். மேலும், வங்கக் கடலில் தாழ்வு பகுதி உருவாகியுள்ளதால், தமிழகம், புதுச்சேரி, ஆந்திரம் ஆகிய பகுதிகளில் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம்.

3 நாள்களுக்கு பலத்த மழை: இந்த நிகழ்வின் காரணமாக, அடுத்து வரும் 3 நாள்களுக்கு நல்ல மழை இருக்கும்.

கடலோர மாவட்டங்களில், வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய 3 நாள்களுக்கு பெரும்பாலான இடங்களில் பலத்த மழை இருக்கும் என்றார் எஸ்.ஆர்.ரமணன்.

**பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார் முதல்வர்**



சென்னை உள்பட மூன்று மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் ஜெயலலிதா ஹெலிகாப்டர் மூலம் வியாழக்கிழமை பார்வையிட்டார். இதற்காக, சென்னை கடற்கரைச் சாலையில் உள்ள இந்திய விமானப் படை தளத்தில் இருந்து காலை 10 மணியளவில் முதல்வர் புறப்பட்டார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளை இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டேன். ஈக்காட்டுத்தாங்கல், கோட்டூர்புரம், அடையாறு, வேளச்சேரி, திருவொற்றியூர், பெரும்பாக்கம், ஊரப்பாக்கம், தாம்பரம், முடிச்சூர், வரதராஜபுரம், பல்லாவரம், சோழிங்கநல்லூர், அசோக்நகர், வியாசர்பாடி ஆகிய சென்னை நகரின் பகுதிகளைப் பார்வையிட்டேன். மேலும், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள சடையாங்குப்பம், மணலி புதுநகர், ரெட்டேரி, புழல், பூண்டி ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, கொசஸ்தலை ஆறு ஆகியவற்றைப் பார்வையிட்டேன் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். சுமார் 2 மணி நேரம் வரை ஹெலிகாப்டரில் அவர் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட்டார்.

**சர்க்கரை உற்பத்தி 24% அதிகரிப்பு**

நாட்டில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் சர்க்கரை உற்பத்தி 24 சதவீதம் அதிகரித்ததாக, இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பாக அந்த சங்கம் வியாழக்கிழமை வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: சர்க்கரை வர்த்தக ஆண்டு அக்டோபர் முதல் செப்டம்பர் வரை கணக்கிடப்படுகிறது. இந்நிலையில், வர்த்தக ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் சர்க்கரை உற்பத்தி 23.60 டன் ஆக உள்ளது. இது கடந்த ஆண்டு நிலையைவிட 24 சதவீதம் கூடுதலாகும். கடந்த ஆண்டு இவ்விரண்டு மாதங்களில் உற்பத்தியான சர்க்கரையின் அளவு 18.98 டன் ஆக இருந்தது. அதைவிடத் தற்போது 4.62 லட்சம் டன் கூடுதலாக உற்பத்தியாகியுள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தில் உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவு கணிசமாக அதிகரித்ததால் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தில் அக்டோபர்-நவம்பரில் உற்பத்தியான சர்க்கரையின் அளவு 12.87 டன் ஆகும். கடந்த ஆண்டு இதே கால அளவில் உற்பத்தியான அளவு 11.95 டன். உத்தரபிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலும் சர்க்கரை உற்பத்தி அதிகரித்தது. நடப்பு நிதி ஆண்டில் நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தி 2.6 கோடி டன் முதல் 2.7 கோடி டன் வரை இருக்கம் என்று கணிக்கப்பட்டுள்ளது. சர்க்கரை உற்பத்தியில் தொடர்ச்சியாக 6-ஆவது ஆண்டு உபரி நிலை இருக்கும். உபரி உற்பத்தியைத் தீர்க்கும் வகையில், ஆலைகள் 40 லட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதை மத்திய கட்டாயமாக்கியுள்ளது. இந்த நிலையில், ஏற்கெனவே 4 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. இதில் சுமார் 1.75 லட்சம் டன் அளவு கடந்த அக்டோபர் 1-ஆம் தேதி முதல் ஏற்றுமதியாகியுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. சர்க்கரைப் பயன்பாட்டில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

**ரபி பருவப் பயிர்களின் விதைப்பு கடும் பாதிப்பு: மத்திய அமைச்சர்**

வறட்சி, வெள்ளம் ஆகியவை காரணமாக நிகழாண்டில் ரபி பருவப் பயிர்களின் விதைப்பு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் ராதாமோகன் சிங் தெரிவித்தார். தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் பங்கேற்று

அவர் பேசியதாவது: நாட்டில் கடந்த ஓராண்டு காலமாக நிலவிய மோசமான பருவநிலை காரணமாக விவசாயப் பயிர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டைப் பொருத்தவரை, கோடைக்காலத்தில் கடும் வெயிலின் காரணமாக கரீஃப் பருவப் பயிர்கள் பெருமளவில் சேதமடைந்தன. இதேபோல், போதிய மழையின்மையால் ரபி பருவப்பயிர்களும் பாதிக்கப்பட்டன. இந்த பாதிப்பிலிருந்து மீள்வதற்குள்ளாகவே, நிகழாண்டிலும் பருவநிலை மாற்றத்தால் ரபி, கரீஃப் பருவப் பயிர்கள் கடும் சேதத்தை சந்தித்துள்ளன. குறிப்பாக, தற்போது வழக்கத்துக்கு மாறாக கடுமையான மழை பெய்து வருகிறது. இதனால், கோதுமை உள்ளிட்ட ரபி பருவப் பயிர்களின் விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 372.61 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்ட ரபி பருவப் பயிர்கள், நிகழாண்டு 317 லட்சம் ஹெக்டேரில் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளன. இதனால் அடுத்த ஆண்டில் உணவுத் தட்டுப்பாட்டு அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைத் தடுக்க, இயந்திரங்கள் மூலம் ரபி பருவப் பயிர்களை விதைக்கத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. இதற்காக, ரூ.773 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் ராதாமோகன் சிங்.

**ஒருபோக சாகுபடி பகுதிக்கு கூடுதல் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை**

மேலூர் ஒருபோகச் சாகுபடி பகுதியில் நாற்றங்கால் தயாரிப்புப் பணிகள் தீவிரமாக நடைபெறுவதால், கால்வாய்களில் கூடுதல் தண்ணீர் திறக்க விவசாயிகள் பொதுப்பணித் துறையினரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

வைகை அணையிலிருந்து மேலூர் ஒருபோகச் சாகுபடி பகுதிகளுக்கு திறந்துவிடப்பட்ட தண்ணீர் கடைமடைப் பகுதி வரை வந்துள்ளது. இந்நிலையில், வியாழக்கிழமை காலை பல கிளைக் கால்வாய்களில் மிகவும் குறைந்த அளவே தண்ணீர் விடப்பட்டது. இதையடுத்து, பொதுப்பணித் துறை அலுவலகத்தில் திரண்ட கொட்டக்குடி பகுதி விவசாயிகள், நாற்றங்கால்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்பதால், கூடுதல் தண்ணீர் திறக்கவேண்டும் என வலியுறுத்தினர். வெள்ளிக்கிழமை காலை கூடுதல் தண்ணீர் கிடைக்கும் என உறுதி அளித்து, பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறுகையில்,

வைகையிலிருந்து ஆயிரம் கனஅடி தண்ணீர் பிரதானக் கால்வாயில் திறக்கப்பட்டு, நேரடியாக மேலூர் பகுதிக்கு வந்தது. இரண்டாம் போக சாகுபடி பகுதிகளுக்கு 10 நாள்களுக்கு பின்னர் தண்ணீர் திறக்குமாறு கோரியிருந்தனர். ஆனால், புதன்கிழமை இரவு கள்ளந்திரி மதகு வரை கிளை கால்வாய்களில் 700 கனஅடி வரை தண்ணீர் எடுக்கப்பட்டதால், இங்கு வரத்து மிகவும் குறைந்துவிட்டது. தற்போது கூடுதலாக 300 கனஅடி திறக்கப்படவுள்ளது. தேவைப்படும் பகுதிகளுக்கு நீர் பகிர்ந்தளிக்கப்படும் எனத் தெரிவித்தனர்

**தேனி மாவட்டத்தில் 14.72 மி.மீ. மழை**

தேனி மாவட்டத்தில் வியாழக்கிழமை சராசரியாக 14.72 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. தேனி மாவட்டத்தில் புதன்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது. போடியில் அதிக அளவில் 64 மி.மீ., கூடலூரில் 52, உத்தமபாளையத்தில் 32, ஆண்டிபட்டியில் 3, தேனியில் 4, வீரபாண்டியில் 10, மஞ்சளாரில் 6, பெரியகுளம் மற்றும் சோத்துப்பாறையில் தலா 1 மி.மீ. மழை பெய்துள்ளது. மஞ்சளாறு, சோத்துப்பாறை அணை மற்றும் சண்முகாநதி நீர்த்தேக்கத்தில் தண்ணீர் முழு கொள்ளளவிற்கு நிரம்பியுள்ளது.

**பேரையூர், தே.கல்லுப்பட்டி பகுதிகளில் மழையால் 3000 ஏக்கரில் பயிர்கள் பாதிப்பு**

தே.கல்லுப்பட்டி மற்றும் பேரையூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் புதன்கிழமை இரவு 11 செ.மீ. அளவு மழை பெய்தது. இதனால், 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான பயிர்கள் சேதமடைந்தன. மதுரை மாவட்டம், பேரையூர் மற்றும் தே.கல்லுப்பட்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. கடந்த வாரமே, இப்பகுதிகளில் உள்ள 22 கண்மாய்கள் நிரம்பின. இந்நிலையில், புதன்கிழமை இரவு பெய்த கனமழையால் மோதகம், சிட்டுலொட்டி, முருகனேரி ஆகிய பகுதிகளில் காட்டு வெள்ளம் பெருக்கெடுத்து, முருகனேரி மற்றும் மோதகம் கண்மாய்கள் உடையும் அபாயம் ஏற்பட்டது. முருகனேரி கண்மாயில் ஏற்பட்ட விரிசல்கள் உடனடியாக சரி செய்யப்பட்டன.

பெரியசிட்டுலொட்டி மற்றும் முருகனேரி பகுதிகளில் பாலங்கள் வெள்ளத்தால் மூழ்கியிருந்ததால், காலை முதல் பேருந்துகள் இயக்கப்படவில்லை. முருகனேரி, கொட்டாணிபட்டி, கோபாலபுரம், மோதகம், நரசிங்காபுரம் பகுதிகளில் மழை வெள்ளம் வீடுகளில் புகுந்தது. இதனால், 10-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. மேலும், 3 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த மானாவாரி பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. ஓடை சரிவர தூர்வாராததால், பெரியசிட்டுலொட்டியிலிருந்து சிட்டுலொட்டி செல்லும் சாலை, மங்கம்மாள்பட்டியிலிருந்து வி.சத்திரப்பட்டி செல்லும் சாலை ஆகியன முற்றிலும் துண்டிக்கப்பட்டன. இது குறித்து, அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கையில், இப்பகுதிகளில் ஓடைகள் மற்றும் கண்மாய்கள் தூர்வாரப்படாததால், மழை நீர் கண்மாய்களுக்குச் செல்லாமல், விளை நிலங்களுக்குள் புகுந்து, பயிர்கள் சேதமடைந்துள்ளன என்றனர்.

பார்வையிட்ட ஆட்சியர்: மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மோதகம், சிட்டுலொட்டி பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் இல. சுப்பிரமணியன் பார்வையிட்டார். அப்போது, கண்மாய் கரைகளை பலப்படுத்தவும், ஓடு பாலங்களை உயர்மட்டப் பாலமாக மாற்றுவதற்கான பணிகளையும் உடனே மேற்கொள்ள உத்தரவிட்டார். மேலும், பாதிப்புகளை துரித கதியில் நிவர்த்தி செய்ய தே.கல்லுப்பட்டி ஒன்றிய நிர்வாகத்தினருக்கு உத்தரவிட்டார்.

அப்போது, துணை ஆட்சியர் ரோகிணி ராம்தாஸ் மற்றும் வருவாய்த் துறையினர், பொதுப்பணித் துறையினர், ஒன்றிய நிர்வாகத்தினர் உடன் சென்றிருந்தனர்.

**நிலவேம்பு குடிநீர் வழங்கும் முகாம்**

சிங்கம்புணரியில் நிலவேம்பு குடிநீர் வழங்கும் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. சிங்கம்புணரி சேவுகா அரிமா சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்முகாமுக்கு வட்டாரத் தலைவர் சந்திரசேகர் தலைமை வகித்தார். துணைத் தலைவர் கண்ணன் முன்னிலை வகித்தார். முகாமினை பேரூராட்சி செயல் அலுவலர் முனியாண்டி தொடங்கி வைத்தார். முகாமில் டெங்கு மற்றும் மர்ம காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு பிரசுரங்கள் பொதுமக்களிடையே வழங்கப்பட்டன. பிரான்மலை ஆரம்ப சுகாதார நிலைய

சித்த மருத்துவர் சரவணன் தலைமையில் செவிலியர்கள் நிலவேம்பு குடிநீரை பொதுமக்களுக்கு வழங்கினர். மேலும் முகாமில் அரிமா சங்கத் தலைவர் ரெங்கசாமி, செயலர் சிங்கராஜா, பொருளாளர் முருகேசன், மாவட்டத் தலைவர் செந்தில்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் விவசாயக் கடன் வழங்கல்**

திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுவைச் சேர்ந்த 100 பெண்களுக்கு ரூ.10 லட்சம் வட்டியில்லா விவசாயக் கடன் வழங்கப்பட்டது.

இவ்விழாவுக்கு சங்கத் தலைவர் ஜெ.சிவசுப்பிரமணியன் தலைமை வகித்து வங்கிக் கடனை வழங்கினார். முன்னதாக செயலர் பெரியசாமி வரவேற்றார். மாவட்ட கவுன்சிலர் செல்விமாதன், ஆ.மருது, கரு.கலையரசன், ஊராட்சி மன்றத் தலைவர் பெரி.மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிராமணம்பட்டி, பூமணந்தான்பட்டி, தேவாரம்பூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழு விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கபட்டது.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் விவசாயக் கடன் வழங்கல்**

திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுவைச் சேர்ந்த 100 பெண்களுக்கு ரூ.10 லட்சம் வட்டியில்லா விவசாயக் கடன் வழங்கப்பட்டது.

இவ்விழாவுக்கு சங்கத் தலைவர் ஜெ.சிவசுப்பிரமணியன் தலைமை வகித்து வங்கிக் கடனை வழங்கினார். முன்னதாக செயலர் பெரியசாமி வரவேற்றார். மாவட்ட கவுன்சிலர் செல்விமாதன், ஆ.மருது, கரு.கலையரசன், ஊராட்சி மன்றத் தலைவர் பெரி.மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிராமணம்பட்டி, பூமணந்தான்பட்டி, தேவாரம்பூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழு விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கபட்டது.

**கம்பு விளைச்சல் அதிகரிப்பு: ஆத்தூர் விவசாயிகள் மகிழ்ச்சி**

ஆத்தூர் பகுதியில் கம்பு விளைச்சல் அதிகரித்திருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர், ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வேடந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சிறுதானிய பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.

பாசனத்திற்கு அதிக நீர் தேவையில்லை என்பதால், சிறுதானிய பயிர் வகைகளை சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அதிகபட்சமாக மக்காச்சோளம் 38 ஹெக்டேரிலும், சோளம் 20ஆயிரம் ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அதற்கு அடுத்தபடியாக சுமார் 800 ஹெக்டேரில் கம்பு பயிரிடப்பட்டுள்ளது. இதர சிறுதானியங்களான கேழ்வரகு, திணை, சாமை, குதிரைவாலி ஆகியவை குறைந்த அளவில் பரவலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆத்தூர்,ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கம்பு இப்போது அறுவடைக்கு தயாராக உள்ளன.அடுத்த 10 நாள்களில் அறுவடைப் பணிகள் தொடங்கும் என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். இதையடுத்து ஆத்தூர், முன்னிலைக்கோட்டை, பஞ்சம்பட்டி, கலிக்கம்பட்டி, ஆரியநல்லூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 2ஆவது சாகுபடியை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

**அமராவதி அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றம்**

அமராவதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்து வியாழக்கிழமை அதிகாலை அணையிலிருந்து உபரி நீர் திறக்கப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்து வரும் கனமழை காரணமாக தற்போது அமராவதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. அணையின் மொத்த கொள்ளளவான 90 அடிக்கு நீர் நிரம்பியதையடுத்து வியாழக்கிழமை அதிகாலை அணையிலிருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டது. மழையின் காரணமாக வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அணைக்கு நீர் வரத்து 7,960 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் 7,169 கன அடியாகவும் இருந்தது. வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் நீர்

வரத்து குறைந்து 2,165 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் 2,368 கன அடியாகவும் இருந்தது. மேலும், நீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆற்றின் கரையோர தாழ்வுப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்நிலையில், உபரி நீர் வெளியேற்றத்தை வனத் துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். ஆட்சியர் கு.கோவிந்தராஜ், சட்டப்பேரவை உறுப்பினர்கள் சி.சண்முகவேலு, கே.பொன்னுசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.பிரசன்னாராமசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**அமராவதி அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றம்**

அமராவதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்து வியாழக்கிழமை அதிகாலை அணையிலிருந்து உபரி நீர் திறக்கப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்து வரும் கனமழை காரணமாக தற்போது அமராவதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. அணையின் மொத்த கொள்ளளவான 90 அடிக்கு நீர் நிரம்பியதையடுத்து வியாழக்கிழமை அதிகாலை அணையிலிருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டது. மழையின் காரணமாக வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அணைக்கு நீர் வரத்து 7,960 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் 7,169 கன அடியாகவும் இருந்தது. வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் நீர் வரத்து குறைந்து 2,165 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் 2,368 கன அடியாகவும் இருந்தது. மேலும், நீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆற்றின் கரையோர தாழ்வுப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்நிலையில், உபரி நீர் வெளியேற்றத்தை வனத் துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். ஆட்சியர் கு.கோவிந்தராஜ், சட்டப்பேரவை உறுப்பினர்கள் சி.சண்முகவேலு, கே.பொன்னுசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.பிரசன்னாராமசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**தொடர் மழை: சின்ன வெங்காயம் சாகுபடி பாதிப்பு**

சத்தியமங்கலம் பகுதியில் பெய்த தொடர்மழையால் சின்ன வெங்காயம் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. சத்தியமங்கலம், நால்ரோடு, கெம்பநாயக்கன்பாளையம், சிக்கரம்பாளையம், பெரியூர், மாரனூர், தொட்டம்பாளையம் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிர் நடவு செய்யப்பட்ட நாளில் இருந்து 40 நாள்களாக இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்ததால் தோட்டத்தில் மழைநீர் தேங்கி வெங்காயப் பயிரில் அழுகல் நோய் ஏற்பட்டுள்ளது. இந்நோய் பாதிப்பில் இருந்து பயிரை காப்பாற்ற மருந்து தெளிக்கப்பட்டது. அறுவடைக்கு இன்னும் 30 நாள்கள் உள்ள நிலையில், மீண்டும் மழை பெய்தால் வெங்காயத்தின் பாதிப்பு ரூ. 10 லட்சத்தை தாண்டும் என அஞ்சப்படுகிறது. இதுகுறித்து விவசாயி சுப்பையன் கூறுகையில், "கோவை, ஈரோடு, சேலம் மாவட்டத்திலேயே அதிக அளவில் சின்ன வெங்காயம் இப்பகுதியில்தான் பயிரிடப்படுகிறது. இரவில் பனிப்பொழிவும் பகலில் வெயிலும் நிலவினால் ஏக்கருக்கு 8 டன் வரை மகசூல் கிடைக்கும். தற்போது அழுகல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏக்கருக்கு 4 டன் மட்டுமே கிடைக்கும். ஏக்கருக்கு 400 கிலோ விதைக்காயை கிலோ ரூ.35 வீதம் வாங்கி நடவு செய்துள்ளோம். இதுதவிர, மருந்து தெளிப்பு மற்றும் அறுவடை போன்ற உற்பத்தி செலவுகள் உள்ள நிலையில் அறுவடையின் போது கிலோ ரூ.25-க்கு விற்கப்பட்டால் மட்டுமே விவசாயிகளை காப்பாற்ற முடியும்' என்றார்.

**நெல் பயிரில் குலை நோய் தாக்குதல்: விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை**

நெல் பயிரில் குலை நோய் தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை தெரிவித்துள்ளார். தேவகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத் துறை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் வட்டார தொழில் நுட்பக் குழு மற்றும் விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வட்டார தொழில் நுட்பக் குழுத் தலைவரும், வேளாண்மை உதவி

இயக்குநருமான பாஸ்கரமணியன் தலைமை வகித்து பேசுகையில், தற்போது காற்றில் ஈரப்பதம் மிகுந்து இருக்கும் சூழ்நிலையில் நெற்பயிரில் குலைநோய் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறியானது இலைகளில் நீண்ட கண் வடிவ புள்ளிகள் கதிரின் கழுத்து பகுதி வரை காணப்படும். இவற்றின் தாக்குதல் அதிகமானால் பயிர் வளர்ச்சி குன்றுவதோடு கதிர் காய்ந்து ஒடிந்து விடும். மகசூலும் பாதிக்கப்படும். எனவே அதிக தழைச்சத்து இடுவதை குறைக்க வேண்டும். தழைச்சத்து சரியான முறையில் பிரித்து இடுதல் வேண்டும். ட்ரைசைக்ளோசோல் 200 கிராம் அல்லது கார்பன்டைசிம் 100 கிராம் இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். தொடர்ந்து மப்பும் மந்தாரமுமான சூழல் நிலவி வருவதால் விவசாயிகள் குறிப்பாக பிபிடி நெல் வயல்களில் முன் எச்சரிக்கையாக கண் வடிவ இலைப்புள்ளியை கண்டவுடனே தெளிப்பது நல்லது. மேலும் நெற்பயிரில் இலைசுருட்டுப் புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே உரமிட வேண்டும். குளோர்பைரிபாஸ் 400 மி.லி. அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 10 கிலோ ஒரு ஏக்கருக்கு கலந்து தெளிக்கலாம். பயிர் காப்பீடு செய்ய டிசம்பர் 15 கடைசி நாள். எனவே விவசாயிகள் பயிர்காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம் என அவர் கூறினார். விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) வட்டார தொழில் நுட்ப மேலாளார் சூர்யா நடப்பாண்டில் செயல்படுத்தப்பட இருக்கும் திட்டங்களை எடுத்துக் கூறி அதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்திலிருந்து வந்திருந்த விஞ்ஞானி விமலேந்திரன், தோட்டக்கலைத் துறை அலுவலர் சத்யா, துணை வேளாண்மை அலுவலர் ஒம்குமார், உதவி விதை அலுவலர் ஞானசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்துக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சரவணன், பாலமுருகன் ஆகியோர் செய்திருந்தனர்.

**சித்தேரி மலையில் சந்தன விதைகள் தூவும் பணி தொடக்கம்**

சித்தேரி மலைப்பகுதியில் சந்தன விதைகள் தூவும் பணி தொடங்கியிருப்பதாக மொரப்பூர் வனச்சரகர் என்.ஆறுமுகம் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வியாழக்கிழமை கூறியது: வனப்பகுதியில் சந்தன மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என அரூர் மாவட்ட வன அலுவலர் எஸ்.ராமசுப்பிரமணியன் உத்தரவிட்டுள்ளார். அவரது உத்தரவுப்படி, அரூர் வனக்கோட்டத்தில் உள்ள அனைத்து வனப்பகுதியிலும் சந்தன மர விதைகள் தூவும் பணிகள் நடைபெறுகின்றன. தற்போது பருவமழை காலம் என்பதால், வனப்பகுதியில் சந்தன விதைகளைத் தூவினால் நன்றாக வளரும். இத்துடன் சீதா, வேம்பு ஆகிய விதைகளும் தூவப்படுகின்றன. வனப்பகுதியில் வசிக்கும் பழங்குடியின பெண்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில், சந்தன மர விதைகளைத் தூவும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அரூர், கோட்டப்பட்டி, சித்தேரி உள்ளிட்ட அனைத்து காப்புக்காடுகள் மற்றும் வனப்பகுதிகளிலும் சந்தன மர விதைகள் தூவும் பணிகள் நடைபெறுகின்றன என்றார்.

**நீலகிரியில் தொடரும் மழை**

நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் அதிக மழை பெய்யுமென வானிலை ஆய்வு மையம் எச்சரித்திருந்த நிலையில், மாவட்டத்தில் வியாழக்கிழமை மழை குறைவாகவே இருந்தது. மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் புதன்கிழமை இரவு வரை பரவலாக மழை பெய்திருந்த நிலையில் வியாழக்கிழமை பகலிலும் பரவலாக மழை பெய்தது.

தொடர் மழையின் காரணமாக மாவட்டத்தில் உறை பனிக்காலம் தொடங்குவதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் அதிக மழையும், குளிரும் இல்லாத காலநிலையே நிலவுகிறது. மழை மற்றும் காற்றின் காரணமாக உதகை - குன்னூர் தேசிய நெடுஞ்சாலையில், அருவங்காடு அருகே, கோபாலபுரம் பகுதியில் சாலையின் குறுக்கே மரம் விழுந்ததால் வியாழக்கிழமை காலையில் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை வரை 183 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அதிக அளவாக கோடநாட்டில் 36 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழை விவரம் வருமாறு (அளவு மில்லி மீட்டரில்): கேத்தி - 26.4, உதகை - 24, கிளன்மார்கன் - 17, குன்னூர் - 12.8, அவலாஞ்சி - 11, எமரால்டு - 10, கல்லட்டி, நடுவட்டம் தலா - 9, கோத்தகிரி - 8.3, பர்லியாறு - 7, குந்தா - 4, கிண்ணக்கொரை - 3, தேவாலா - 2, கூடலூர், கெத்தை, அப்பர்பவானி தலா - 1 மி.மீ.

**தொடர் மழை: தோட்டக்கலைப் பயிர்களை பாதுகாக்க வேளாண் துறை யோசனை**

அரியலூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையிலிருந்து தோட்டக்கலைப் பயிர்களை பாதுகாக்க மாவட்ட தோட்டக்கலைத் துறை யோசனை தெரிவித்துள்ளது. இதுகுறித்து புதன்கிழமை அரியலூர் மாவட்ட தோட்டக்கலை துறை துணை இயக்குநர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் முந்திரி, காய்கறி பயிர்களான கத்தரி, மிளகாய், முருங்கை, கொடி வகை காய்கறிகள், மரவள்ளி, வாழை ஆகிய பயிர்கள் 32,000 ஹெக்டருக்கும் அதிகமாக பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை வழக்கத்தைவிட அதிகமாக பதிவாகியுள்ளது. அதாவது அரியலூர் மாவட்டத்தில் சராசரி வடகிழக்குப் பருவமழை அளவு 485 மி.மீ., ஆகும். ஆனால் இதுவரை 569 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் பயிரிடப்பட்டுள்ள தோட்டக்கலைப் பயிர்கள் அதிக பாதிப்புக்குள்ளாக வாய்ப்புள்ளது. மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகள் கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைப்பிடிக்கலாம்.மழைநீர் தேங்கியுள்ள வயல்களிலிருந்து தண்ணீரை வெளியேற்றும் பொருட்டு நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்தி வயலில் உள்ள தண்ணீரை வெளியேற்றிவிட வழிவகை செய்ய வேண்டும். இலைவழி ஊட்டமாக 1 ஏக்கருக்கு 2 கிலோ யூரியா அல்லது பொட்டாசியம் நைட்ரேட்டும், 1 ஏக்கருக்கு 200 கிராம் நுண்ணூட்டக் கலவையான ரெக்சோலினும் கலந்து தெளிக்க வேண்டும். காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தை 1 லிட்டருக்கு 3 கிராம் வீதத்தில் கலந்து கரைசல் நன்கு பயிர்களின் வேரில் படும்படி ஊற்ற வேண்டும். பூச்சி, நோய் தாக்குதலுக்கு தற்போது சாதகமான சூழ்நிலை நிலவி வருவதால் அன்றாடம் வயலினை ஆய்வு செய்து

ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொண்டு தொடர் மழையிலிருந்து தங்கள் பயிர்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் விபரங்களுக்கு தங்கள் வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம்.

**தென்னை நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறை**

தென்னை நோய்களைக் கட்டுப்படுத்தும் நவீன தொழில்நுட்ப வழிமுறைகள் குறித்து பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் மு. சுப்பையா வெளியிட்ட செய்திக்குறிப்பு: குருத்தழுகல், சாறு வடிதல், தஞ்சாவூர் வாடல் நோய், இலைக்கருகல், இலைப்புள்ளி ஆகியவை தென்னையைத் தாக்கும் முக்கிய நோய்களாகும். இவற்றைக் கட்டுப்படுத்த பயன்படும் ரசாயனக் கொல்லிகள் பெரியளவில் தீங்கு ஏற்படுத்தக் கூடியவை. அவற்றைப் பயன்படுத்துவதால் சுற்றுச்சுழல் மாசுபாடு, நோய்க் காரணிகளுக்கு எதிர்ப்புச்சக்தி அதிகரிப்பு, உணவுப் பொருள்களில் நச்சுத்தன்மை, உயிரினங்களுக்கு தீங்கு போன்றவை ஏற்படுகின்றன.

ஆனால், உயிர் எதிர்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் இத்தகைய தீங்குகள் ஏற்படுவதில்லை. இந்த முறையைக் கையாளும்போது சூடோமோனஸ் புளூரசன்ஸ் என்ற நன்மை தரக்கூடிய பாக்டீரியாவும், டிரைக்கோடெர்மா விரிடி என்ற நன்மை தரக்கூடிய பூஞ்சாணமும் சிறப்பாகச் செயல்பட்டு தென்னையைத் தாக்கும் பல நோய்களைக் கட்டுப்படுத்துகின்றன.

மேலும் இவை நீடித்த நன்மை தருவதோடு, தென்னை மரத்தின் நோய் எதிர்ப்புச் சக்தியையும் அதிகரிக்கின்றன. ஆண்டுக்கு 5 கிலோ வேப்பம்புண்ணாக்கு, 50 கிலோ மக்கிய சாண எருவுடன், 200 கிராம் சூடோமோனஸ் புளூரசன்ஸ் பொடியை கலந்து மண்ணில் இடுவதால் குருத்தழுகல், இலைக்கருகல் ஆகிய நோய்களின் தாக்குதலைக் குறைக்கலாம்.

ஒரு மரத்திற்கு 100 கிராம் சூடோமோனஸ் புளூரசன்ஸ், 100 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி, 10 கிலோ தொழுவுரம் ஆகியவற்றை கலந்து 6 மாதத்திற்கு ஒரு முறை மண்ணில் இடுவதால் தஞ்சாவூர் வாடல் நோய், சாறு வடிதல் நோய் ஆகியவை தாக்காமல் தென்னை மரத்தைப் பாதுகாக்கலாம்.

**உத்தமபாளையம் பகுதிகளில் தொடர் மழையால் திராட்சை விவசாயம் பாதிப்பு**



உத்தமபாளையம், உத்தமபாளையம் பகுதிகளில் தொடர் மழையால் திராட்சை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். திராட்சை விவசாயம் தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை ஆகிய விவசாயத்திற்கு அடுத்தபடியாக கருப்பு பன்னீர் திராட்சை விவசாயம் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் திராட்சை பழம் கிடைக்கும் இடமாக கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விளங்கி வருகிறது. கம்பம், உத்தமபாளையம், காமயகவுண்டன்பட்டி, சுருளிபட்டி, நாரயணத்தேவன்பட்டி, க.புது பட்டி, அனுமந்தன்பட்டி, ராயப்பன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் கருப்பு பன்னீர் திராட்சை விவசாயம் நடைபெற்று வருகின்றது. இங்கு விளையும் திராட்சை பழங்கள் தமிழ்நாட்டில் உள்ள சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட பல்வேறு நகரங் களுக்கும் அண்டை மாநிலமான கேரளாவிற்கும் அனுப்பப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தற்போது பெய்து வரும் தொடர் மழையால் திராட்சை பழங்கள்

கொடியிலேயே பிஞ்சுகள் உதிர்ந்தும், திராட்சை கொடிகளில் கவாத்து செய்யப்பட்ட இடங்களில் நோய்தாக்குதலும் ஏற்பட்டு வருகின்றது. சேதம் அடைந்த திராட்சை அதே நேரத்தில் அறுவடைக்கு தயாராக இருக்கும் திராட்சை பழங்களில் வெடிப்பு ஏற்பட்டு அழுகல் நோய் உண்டாகியுள்ளது. உத்தமபாளையம் அருகே உள்ள ஆனைமலையன்பட்டியில் உள்ள திராட்சை தோட்டத்தில் அறுவடைக்கு தயாராக இருந்த திராட்சை பழங்கள் மற்றும் இலைகளில் தண்ணீர் நிற்பதால் திராட்சை பந்தலில் உள்ள குத்துக்கல் அதிக எடையின் காரணமாக உடைந்து திராட்சை பந்தல் தரையில் சரிந்துள்ளது.

இந்த தோட்டத்தில் மட்டும் 7 ஆயிரம் கிலோ திராட்சை பழங்கள் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. சேதமைடைந்த திராட்சை தோட்டத்தை உத்தமபாளையம் தாசில்தார் ரமேஷ் குமார் மற்றும் தோட்டக்கலை துறையினர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள திராட்சை பழங்கள் கீழே சரிந்து சேதம் அடைந்துள்ளதால் இந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மேலும் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை: வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



ஆண்டிப்பட்டி

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை காரணமாக வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதையொட்டி வைகை அணையில் தண்ணீர் சீறிப்பாய்வதை காண சுற்றுலா பயணிகள் குவிந்து வருகிறார்கள். வைகை அணை தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணை மாவட்டத்தின் முக் கிய சுற்றுலாதலமாக விளங்கி வருகிறது. 71 அடி உயரம் கொண்ட வைகை அணையில் சிறுவர் பூங்கா உள்ளிட்ட ஏராளமான பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்துள்ளன. விடுமுறை நாட்களில் வைகை அணைக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படும். வார வேலை நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்த அளவே காணப்படும்.

இந்த நிலையில் தற்போது வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்துபிரதான மதகுகளின் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. பிரதான மதகுகள் வழியாக தண்ணீர் திறக் கப்பட்டு வரும் காட்சியை காண தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்த வந்த வண்ணம் உள்ளனர். மாணவ, மாணவிகள் இவர்கள் அணையின் பிரதான மதகுகள் வழியாக தண்ணீர் திறக்கப்படும் காட்சியை மதகுகளுக்கு முன்பாக நின்று புகைப்படம் எடுத்து மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர். குறிப்பாக பல்வேறு மாவட்டங் களை சேர்ந்த ஆயிரக்கணக் கான பள்ளி மாணவ-மாணவிகளை அணைக்கு அழைத்து வருகின்றனர். அணையில் தண்ணீர் திறக்கப்பட்டு இருப்பதை கண்டு மாணவ-மாணவிகள் குதூகலமடைந்து வருகின்றனர். வேலை நாளான நேற்று வைகை அணைக்கு ஆயிரத்திற்கும் அதிகமான பள்ளி மாணவ-மாணவிகள் வந்திருந்தனர்.

இதற்கிடையே கடந்த சில நாட்களாக தேனி மாவட்டத்தில் மழை எதுவும் பெய்யாத நிலையில், அணைகளுக்கான நீர்வரத்து குறைந்து கொண்டே வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் தேனி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. வைகை அணையின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்ததால் நேற்றுக்காலை முதல் வைகை அணைக்கு வரும் நீரின்அளவு படிப்படியாக உயர்ந்தது. இதனால் வைகை அணையின் நீர்மட்டம் மீண்டும் சீராக உயர்ந்து வருகிறது. நீர்மட்டம் உயர்வு வைகை அணைக்கு

நேற்றுக் காலை 6 மணியளவில் வினாடிக்கு 1,531 கனஅடியாக இருந்த நீர்வரத்து பிற்பகல் 12 மணியளவில் 4,137 கனஅடியாக உயர்ந்தது. இதன் காரணமாக வைகை அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது. நேற்று பிற்பகல் 12 மணியளவில் வைகை அணையின் நீர்மட்டம் 65.37 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 4,137 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில், அணையில் இருந்து வினாடிக்கு 2,860 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர் இருப்பு 4,716 மில்லியன்கனஅடியாக காணப்பட்டது.

**திருவாரூர் மாவட்டத்தில் தொடர்மழையால் பாதிக்கப்பட்டுள்ள பயிர்கள் குறித்து உரிய கணக்கெடுப்பு செய்யப்படும் அமைச்சர் காமராஜ் தகவல்**



<u>திருவாரூர்</u>

திருவாரூர் மாவட்டத்தில் தொடர் மழையினால் பாதிக்கப்பட்டுள்ள பயிர்கள் குறித்து உரிய கணக்கெடுப்பு செய்யப்படும் என அமைச்சர் ஆர்.காமராஜ் தெரிவித்தார்.

<u>ஆய்வு கூட்டம்</u>

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக ஆய்வு கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார். இதில் உணவு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆர்.காமராஜ் கலந்து கொண்டார்.அப்போது அவர் பேசியதாவது:–

விவசாய நிலங்கள் மழைநீரால் பாதிக்கப்பட்டால் எக்டேருக்கு முன்பு ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டதை, தற்போது முதல்–அமைச்சர் ஜெயலலிதா, எக்டேருக்கு ரூ.13,500 வழங்கிடவும், மேலும் 33 சதவீதம் பயிர் பாதிக்கப்பட்டால் நிவராணம் வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். கடந்த வாரத்தில் பெய்த மழையில் 670 எக்டேர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. தற்போது 5 ஆயிரத்து 192 எக்டேர் சம்பா நெற்பயிர்களை மழைநீர் சூழ்ந்துள்ளது. வயல்களில் தேங்கியுள்ள மழைநீர் வடிந்த பின்னர் பாதிப்பு குறித்து உரிய கணக்கெடுப்பு செய்யப்படும். கால்நடைத்துறையின் மூலம் 270 மருத்துவ முகாம் நடத்தப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன.. மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேரில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆறுகளில் தண்ணீர் பாசனத்திற்கு இடையூறாக உள்ளஆகாயதாமரை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

<u>நிவாரண உதவிகள்</u>

மேலும் திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை உயிரிழந்த 2 பேருக்கு தலா ரூ.4 லட்சம் வீதம் ரூ.8 லட்சமும், முழுமையாக சேதமடைந்த 33 வீடுகளுக்கும், பகுதி சேதமடைந்த 255 வீடுகளுக்கும் ரூ.12 லட்சத்து 24 ஆயிரத்து 800, கால்நடைகள் உயிரிழப்பை பொறுத்தவரை 12 கன்றுக்குட்டிகள், 26 பசுமாடுகள், 4 எருமை மாடுகள் மற்றும் 46 ஆடுகள் ஆகியவற்றிற்கு ரூ.11 லட்சத்து 22 ஆயிரமும் ஆக மொத்தம் ரூ.31 லட்சத்து 46 ஆயிரத்து 800 மதிப்பிலான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. திருவாரூர் மாவட்டத்தில் நவம்பர் சராசரியாக 350.54 மில்லி மீட்டர் மழை பெய்யும் ஆனால் இந்த ஆண்டு 486.33 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. எனவே சராசரி மழை அளவில் 138 சதவீதம் அதிகமாக பெய்துள்ளது. கடந்த 4 ஆண்டுகளுக்கு கூடுதலாக மழை பெய்துள்ளது. எனவே வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி மோகன்ராஜ், மதுவிலக்கு பிரிவு கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு முத்தரசு, நுகர்பொருள் வாணிபகழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி உள்பட பலர் உடன் இருந்தனர்.

**மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு வலியுறுத்தல்**

<u>நீடாமங்கலம்</u>

மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் திருவாரூர் மாவட்ட செயலாளர் நாகராஜன் நேற்று நீடாமங்கலத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:– <u>நிவாரணம்</u>

கடந்த 20 நாட்களுக்கு மேலாக டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் விவசாயிகள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட நீர் சூழ்ந்த வயல் பகுதிகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளை தமிழக அரசும், மாவட்ட வருவாய் நிர்வாகமும் உடனடியாக ஆய்வு செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்கிட வேண்டும். அதுதவிர கடந்த 3 நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் அடைமழையால் வீடுகள், கால்நடைகளை இழந்தோருக்கும் நிவாரணம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் மட்டும் இந்த கன மழையால் 10.5 லட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் (சம்பா,தாளடி) நீரில் மூழ்கியுள்ளன.

திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் மழை நீரில் மூழ்கியுள்ளன. அதோடு இன்னும் 3 நாட்களுக்கு கனமழை இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. எனவே தடுப்பு நடவடிக்கைகளை எடுத்திடவும், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**வடகிழக்கு பருவமழை: காவிரி டெல்டா மாவட்டங்களில் 694 ஏரி, குளங்கள் நிரம்பின**




தஞ்சாவூர்,

வடகிழக்கு பருவமழையினால் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள 694 ஏரி, குளங்கள் நிரம்பின. இதையடுத்து மழைநீர் கல்லணையில் இருந்து கொள்ளிடம் ஆற்றில் வினாடிக்கு 4 ஆயிரம் கன அடி வீதம் திறக்கப்பட்டுள்ளது. காவிரி டெல்டா பகுதி காவிரி டெல்டா பகுதியாக தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் விளங்கி வருகின்றன. இந்த பகுதிகளில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இதில் குறுவை சாகுபடிக்காக ஆண்டுதோறும் மேட்டூர் அணை ஜூன் மாதம் 12-ந்தேதி திறக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் தாமதமாக திறக்கப்பட்டது.

இதையடுத்து குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவு நடைபெறவில்லை. இதனால் சம்பா சாகுபடி அதிக அளவு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தற்போது சம்பா, தாளடி நடவுபணிகள் முடிவடைந்து விட்டன. தற்போது தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருவதை தொடர்ந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. 694 ஏரி, குளங்கள் நிரம்பின வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு அக்டோபர் 28-ந்தேதி

தொடங்கி தொடர்ந்து பெய்து வருகிறது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு 4 நாட்களுக்கு முன்னதாக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பது அக்டோபர் 24-ந்தேதியே நிறுத்தப்பட்டு விட்டது. காவிரி டெல்டா பகுதிகளில் வெள்ளம் வடிவதற்கு வசதியாக பாசன வாய்க்கால்களில் உள்ள ஆகாயத்தாமரைகள் அகற்றும் பணிகளும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

காவிரி டெல்டா மாவட்டங்களில் மட்டும் 694 ஏரி, குளங்கள் உள்ளன. இந்த ஏரி மற்றும் குளங்கள் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் மற்றும் வடகிழக்கு பருவமழையின் போது பெய்யும் மழைநீரைக்கொண்டு நிரப்பப்படும். அதன்படி தஞ்சை, நாகை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள இந்த 694 ஏரி, குளங்களும் தற்போது நிரம்பி உள்ளன. இதில் கல்லணைக்கால்வாய் பாசன பகுதிகளில் தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 526 ஏரி, குளங்கள் உள்ளன. இதில் தஞ்சையில் உள்ள சமுத்திரம் ஏரி உள்ளிட்ட அனைத்து ஏரி, குளங்களும் நிரம்பி உள்ளன. இதே போல் வெண்ணாறு பாசன பகுதிகளில் உள்ள 39 ஏரி, குளங்களும் நிரம்பி உள்ளன. இது தவிர மற்ற பாசன பகுதிகளில் உள்ள 129 ஏரி, குளங்கள் அனைத்தும் நிரப்பி விட்டன. ஆகாயத்தாமரைகள் அகற்றம் இது குறித்து பொதுப்பணித்துறை திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர் அசோகனிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:- திருச்சி மண்டலத்தில் உள்ள 8 மாவட்டங்களில் 2 ஆயிரத்து 352 ஏரி, குளங்கள் உள்ளன. இதில் ஆறுகளில் வரும் நீரைக்கொண்டு நிரப்பப்படும் 924 ஏரி, குளங்களில் 623 ஏரி, குளங்கள் முழுவதும் நிரம்பி உள்ளன. 301 ஏரி, குளங்கள் 75 சதவீதத்துக்கு மேல் நிரம்பி உள்ளன. மழைநீரால் நிரம்பும் 1,428 ஏரி, குளங்களில் 162 ஏரி, குளங்கள் தற்போது நிரம்பி உள்ளன. மீதமுள்ள 1,266 ஏரி, குளங்கள் 50 சதவீதத்துக்கு மேல் நிரம்பி உள்ளன. ஆறுகளில் இருந்து வரும் நீர் மற்றும் மழைநீரால் காவிரி டெல்டா மாவட்டங்களில் நிரம்பும் 694 ஏரி, குளங்களும் தற்போது நிரம்பி உள்ளன. மேலும் மழைநீர் வயல்களுக்குள் புகுந்து பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக நந்தலாறு, புதுமண்ணியாறு, வடவாறு உள்ளிட்ட ஆறுகளில் சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்துக்கு ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டு

மழைநீர் வடிவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீர் திறப்பு மேலும் தற்போது கல்லணைக்கு வரும் மழைநீர் கொள்ளிடத்தில் திருப்பி விடப்பட்டுள்ளன. கல்லணைக்கால்வாய், வெண்ணாறு, காவிரி ஆறுகளில் மழைநீர் வடிவதற்கு வசதியாகவும், தற்போது இந்த பகுதிகளில் உள்ள ஏரி, குளங்கள் நிரம்பி உள்ளதால் பாசனத்துக்கு தண்ணீர் தேவை இல்லை என்பதால் தற்போது வினாடிக்கு 4 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் கொள்ளிடம் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

**குன்னம் பகுதியில் பலத்த மழை: 1,500 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பருத்தி செடிகள் அழுகி நாசம் ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**



குன்னம்,

குன்னம் பகுதியில் பெய்த பலத்த மழையால் 1,500 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பருத்தி செடிகள் அழுகி நாசமடைந்தன. ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பருத்தி பயிர்கள் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அருகே உள்ள பெரியம்மாபாளையம், அந்தூர்,அசூர், ஒதியம், மூங்கில் பாடி, கல்லம் புதூர், வரகூர், பரவாய், கரம்பியம், மேலமாத்தூர், ஆதனூர் ஆகிய கிராமங்களில் சுமார் 1,500 ஏக்கர் பரப்பளவில் பருத்தி கடந்த செப்டம்பர் மாதம் பயிரிடப்பட்டது.இதைதொடர்ந்து பருத்திக்கு அடி உரம், களை எடுக்கப்பட்டு

மேல் உரமும் போடப்பட்டது. ஒரு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் வரை விவசாயிகள் செலவு செய்து உள்ளனர். விவசாயிகள் கோரிக்கை இந்நிலையில் கடந்த சில தினங்களாக குன்னம் பகுதியில் பலத்த மழை பெய்தது.

இதனால் பருத்தி பயிர் புழுக்களால் தாக்கப்பட்டும், வாடல் நோய், இலை புள்ளி நோய்கள் தாக்கப்பட்டும் அழுகி நாசமடைந்தன. இதனால் பருத்தி பயிரிடப்பட்ட விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்து உள்ளனர். எனவே குன்னம் பகுதியை வெள்ளம் பாதித்த பகுதியாக அறிவித்து பருத்தி பயிருக்கு, ஏக்கருக்கு செலவு செய்த தொகையான ரூ.10 ஆயிரத்தை நிவாரணமாக தமிழக அரசு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் கால்நடைத்துறை இணை இயக்குனர் ஆய்வு**



ஈரோடு,

ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் கால்நடைத்துறை இணை இயக்குனர் ரவிசந்திரன் திடீர் ஆய்வு செய்தார். மாட்டுச்சந்தை ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் மாட்டுச்சந்தை நடைபெறும். அதன்படி நேற்று மாட்டுச்சந்தை கூடியது. இதில் ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம், திருப்பூர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் தங்களது மாடுகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

இந்த மாடுகளை வாங்குவதற்காக தமிழ்நாடு மட்டுமின்றி கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மராட்டியம், கோவா ஆகிய மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் வந்தனர். அவர்கள் தங்களுக்கு தேவையான மாடுகளை விவசாயிகளிடம் நேரடியாக விலை பேசி வாங்கினார்கள். ஆய்வு

இந்தநிலையில் கால்நடை பராமரிப்புத்துறையின் ஈரோடு மண்டல இணை இயக்குனர் பி.ரவிசந்திரன் தலைமையில் அரசு கால்நடை ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டர் பாலசுப்பிரமணியம், டாக்டர் பிரகாசம் ஆகியோர் மாட்டுச்சந்தையை நேற்று ஆய்வு செய்தனர். மாட்டுச்சந்தை சுகாதாரமான முறையில் உள்ளதா? நோய்த்தடுப்பு முறைகள் பின்பற்றப்படுகிறதா? என்று அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள். மாட்டுச்சந்தையின் நுழைவு பகுதியில் வாகனங்களின் சக்கரங்கள் நனையும்படி மருந்து தெளிக்கப்பட்ட தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு உள்ளதா? மாடுகள் விற்பனை செய்யும் பகுதியில் சுண்ணாம்பு பொடி போடப்பட்டு உள்ளதா? என்று ஆய்வு செய்யப்பட்டது. அதன்பின்னர் குடிநீர் வசதி உள்பட அடிப்படை வசதிகள் முறையாக உள்ளதா? என்றும் ஆய்வு நடத்தப்பட்டது. வரத்து குறைந்தது

ஈரோட்டில் நேற்று நடந்த மாட்டு சந்தைக்கு 400 பசு மாடுகள், 200 எருமை மாடுகள் என மொத்தம் சுமார் 600 மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் பசு மாடு ஒன்று குறைந்தபட்சமாக ரூ.16 ஆயிரத்துக்கும், அதிகபட்சமாக ரூ.32 ஆயிரத்துக்கும் விற்பனையானது. இதேபோல் எருமைமாடு ஒன்று குறைந்தபட்சமாக ரூ.18 ஆயிரத்துக்கும், அதிக பட்சமாக ரூ.34 ஆயிரத்துக்கும் விற்பனையானது. இந்த வாரம் மாடுகள் வரத்து குறைவாக இருந்தது. இதுகுறித்து ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையின் மேலாளர் முருகன் கூறியதாவது:-

மாடுகள் பறிமுதல் ஈரோட்டில் இருந்து மராட்டியம், கோவா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு கறவை மாடுகள் லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

ஆனால் கடந்த வாரம் சேலம் மாவட்டம் சங்ககிரியில் மாடுகளை ஏற்றி சென்ற லாரிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும், 20 லாரி டிரைவர்கள்

கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். லாரிகளில் ஏற்றி சென்ற மாடுகளை பறிமுதல் செய்து மயிலாடுதுறையில் உள்ள கோசாலையில் அடைத்து உள்ளனர். எனவே பறிமுதல் செய்யப்பட்ட கறவை மாடுகளை திருப்பி வழங்க வேண்டும் என்று கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து உள்ளோம். மாடுகள் பறிமுதல் செய்யப்பட்டதால் கடந்த வாரத்தைவிட இந்த வாரம் மாடுகள் வரத்து குறைந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

**நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை: ஆழியாறு அணை நிரம்பியது பாலாற்றில் வெள்ளப்பெருக்கு; தரைப்பாலங்கள் மூழ்கின**



நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக ஆழியாறு அணை நிரம்பியது. பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தரைப்பாலங்கள் தண்ணீரில் மூழ்கின. ஆழியாறு அணை நிரம்பியது

தமிழகத்தின் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. பொள்ளாச்சி நகரம் உள்பட சுற்று வட்டார பகுதி மக்களுக்கு குடிநீர் ஆதாரமாக ஆழியாறு அணை இருக்கிறது. 120 அடி கொள்ளளவு கொண்ட ஆழியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்து வருகிறது. இதனால் ஆழியாறு அணைக்கு வரும் தண்ணீர் அதிகரித்தது.

நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின்

நீர்மட்டம் 119 அடியாக இருந்தது. நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்து 119.30 அடியாக உயர்ந்தது. அணைக்கு 900 கன அடியாக வந்து கொண்டு இருக்கிறது. இதனால் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து நேற்று மாலையில் முழு கொள்ளளவான 119.50 அடியை எட்டி அணை நிரம்பியது. அணையின் பாதுகாப்பு கருதி இந்த அளவு மட்டுமே தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. அணை நிரம்பியதால் 11 மதகுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக தண்ணீர் வந்தால் அணையில் இருந்து மதகுகள் வழியாக உடனடியாக தண்ணீர் திறந்துவிடப்படும். பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஆனைமலை பகுதியில் ஆழியாறு, உப்பாறு, வகரையாறு, பாலாறு உள்ளிடவை உள்ளன. ஆழியாறு, உப்பாறு, வகரையாறு ஆகிய ஆறுகளில் ஆண்டு முழுவதும் தண்ணீர் ஓடும். பாலாற்றில் வடகிழக்கு பருவமழை காலங்களில் மட்டுமே தண்ணீர் வரத்து இருக்கும். தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் பாலாற்றில் கடந்த சில நாட்களாக தண்ணீர் ஓடுகிறது. நேற்று முன்தினம் மதியம் முதல் பாலாற்றின் நீர்பிடிப்பு பகுதிகள் மற்றும் ஆழியாறு, நா.மூ.சுங்கம், அர்த்தநாரிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதனால் அந்த பகுதியில் உள்ள சிற்றோடை மற்றும் நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்று அதிகாலை வரை மழை நீடித்ததால் பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

தரைப்பாலங்கள் மூழ்கின பாலாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அர்த்தநாரிபாளையம், கம்பாளபட்டி, சோமந்துறைசித்தூர், கோட்டாம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள 5 தரைப்பாலங்களை மூழ்கடித்து ஆறு நீர் செல்கிறது. வெள்ளப்பெருக்கு காரணமாக ஆற்றின் கரையோரம் உள்ள ஆஞ்சநேயர் கோவிலை வெள்ளம் சூழ்ந்தது. தரைப்பாலங்களை மூழ்கடித்து தண்ணீர் செல்வதால் அந்த வழியாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் தண்ணீர் பாலத்தை மூழ்கடித்ததால் 30 கிராமங்களின் போக்குவரத்து தடைபட்டது. இதனால் கிராம மக்கள் சுமார் 10 கிலோ மீட்டருக்கு மேல் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மாலையில் ஆற்றில் தண்ணீர் குறைந்தது. வெள்ள பெருக்கால் விளை நிலங்களில் தண்ணீர்

புகுந்தது. விவசாய பொருட் களை கொண்டு செல்ல முடியாததால் பணி பாதிக்கப்பட்டது. தென்னந்தோப்புகளில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. வயல்களில் தண்ணீர் தேங்கியதால் நாற்றுகள் தண்ணீரில் மூழ்கி சாய்ந்தன.

**திருச்சி மாவட்டத்தில் பசுமை குடில் அமைத்து பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் தோட்டக்கலை துறை அதிகாரிகள் தகவல்**



திருச்சி

திருச்சி மாவட்டத்தில் பசுமை குடில் அமைத்து பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது என்று தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பசுமை குடில் தோட்டக்கலை துறை சார்பில் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் மலர் மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பாதுகாக்கப்பட்ட முறையில் பசுமை குடில் அமைத்து பயிர்களுக்கு தேவையான அளவில் அனைத்து சூழ்நிலையையும் உருவாக்கி கொடுத்து பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இன்றி உற்பத்தி செய்வதற்காக தோட்டக்கலை துறை அதிகாரிகள் ஆலோசனைகள் வழங்கி வருகிறார்கள். பசுமை குடில் அமைப்பதன்மூலம் பருவம் அல்லாத நிலையிலும் தரமான மலர்கள் மற்றும் காய் கறிகளை உற்பத்தி செய்ய முடிகிறது. பசுமை குடில் அமைத்து பயிர் சாகுபடி செய்வதற்கு

தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டம் உப்பிலியபுரம் அருகே உள்ள கோட்டப்பாளையத்தில் ஒரு விவசாயி 2 ஆயிரம் சதுரமீட்டர் பரப்பளவில் பசுமை குடில் அமைத்து செண்டு மல்லி, சாமந்தி சம்பங்கி ஆகிய மலர் செடிகளையும், வெங்காயம், காலி பிளவர், முலாம்பழம் ஆகியவற்றை ஊடுபயிராகவும் பயிரிட்டு உள்ளார். இதற்காக அவருக்கு ரூ.8 லட்சத்து 90 ஆயிரம் மானியமாக வழங்கப்பட்டு உள்ளது. இதேபோல் சிறு நாவலூர் கிராமத்தை சேர்ந்த ஒரு விவசாயி 1000 சதுர அடி பரப்பளவில் பசுமை குடில் அமைத்து செண்டு மல்லி மற்றும் சாமந்தி பூ பயிரிட்டு உள்ளார். கலெக்டர் ஆய்வு இந்த 2 இடங்களிலும் பசுமை குடில் அமைத்து நவீன தொழில் நுட்பத்துடன் மலர் சாகுபடி நடந்து வருவதை திருச்சி மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிச்சாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவரிடம் தோட்டக்கலை துறை துணை இயக்குனர் தமிழ் களஞ்சியம், உதவி இயக்குனர்கள் ரவிச்சந்திரன், செந்தில்ராணி ஆகியோர் பாதுகாக்கப்பட்ட முறையில் சாகுபடி செய்வது பற்றி விளக்கி கூறினார்கள்.

திருச்சி மாவட்டத்தில் நடப்பு ஆண்டு 7 ஆயிரம் சதுரமீட்டர் பரப்பளவில் பசுமை குடில் அமைத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 7 விவசாயிகளுக்கு மாவட்ட இயக்கக குழுவின் ஒப்புதல் படி பணி ஆணை வழங்கப்பட்டு உள்ளது. பசுமை குடில் அமைக்க ஒரு சதுர மீட்டருக்கு ரூ.467 மானியம் வழங்கப்பட்டு வருவதால் ஆர்வம் உள்ள விவசாயிகள் நெல் தவிர மற்ற அனைத்து பயிர்களையும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயிரிட்டு நல்ல மகசூல் பெறலாம் என்று தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட முதல்வர் உத்தரவு**

வைகை அணையில் இருந்து பாசனத்துக்காக வெள்ளிக்கிழமை முதல் தண்ணீர் திறந்து விட தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில், தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணையிலிருந்து பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து தமிழக அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. இந்த வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையிலிருந்து 5.9.2014 முதல் தண்ணீர் திறந்து விட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதனால், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நிலக்கோட்டை வட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள வாடிப்பட்டி மற்றும் மதுரை வடக்கு வட்டங்களிலுள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர்,

வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, தமிழகத்தில் தலைநகர் சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் இந்த மழை படிப்படியாக தீவிரம் அடைந்து வருகிறது. இதன்காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து கடந்த 4 நாட்களாக படிப்படியாக அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 7,900 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 8,999 கனஅடியாக அதிகரித்துள்ளது. மழையின் காரணமாக, அணையில் இருந்து பாசன தேவைக்காக வினாடிக்கு 700 கனஅடியாக குறைந்த அளவில் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இதன்காரணமாக அணை நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது. நேற்று அணையின் நீர்மட்டம் 93.31 அடியாக

உயர்ந்துள்ளது. இந்த நீர்வரத்து மேலும் அதிகரிக்குமானால் அணை நீர்மட்டம் வேகமாக உயர வாய்ப்பு உள்ளது.

**செம்பரம்பாக்கம் ஏரி தண்ணீர் திறப்பு 5 ஆயிரம் கன அடியாக குறைப்பு: அடையாற்றில் வெள்ளம் வடிகிறது**



சென்னையில் பெய்த கனமழை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரிக்கு அதிக அளவு தண்ணீர் வந்ததால் நேற்று முன் தினம் 30 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டதால் அடையாறு ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதில் குன்றத்தூர், மாங்காடு, பம்மல், அனகாபுத்தூர், மணப்பாக்கம், விமான நிலையம், சைதாப்பேட்டை, கிண்டி, கே.கே.நகர், எம்.ஜி.ஆர். நகர், அசோக் நகர், நந்தனம், கோட்டூர்புரம் உள்பட பல பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டு கிடந்தன.

இங்குள்ள மக்கள் உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் தண்ணீரில் தத்தளித்து வெளியேறினார்கள். சிலர் மாடிகளில் தஞ்சம் புகுந்தனர்.

இந்த நிலையில் செம்பரம்பாக்கம் ஏரிக்கு தண்ணீர்வரத்து குறைந்ததால் ஏரியில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவும் நேற்று முதல் குறைக்கப்பட்டு வருகிறது.

30 ஆயிரம் கன அடியில் இருந்து 20 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டு நேற்று காலை 13 ஆயிரம் கன அடியாக தண்ணீர் திறக்கப்பட்டது.

இதனால் அடையாறு ஆற்றில் வெள்ளப்பெருக்கு படிப்படியாக குறையத் தொடங்கியது.

இன்று காலை ஏரிக்கு வரும் தண்ணீரில் அளவு 4900 கன அடியாக குறைந்ததால் ஏரியில் தண்ணீர் திறப்பது 5 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் அடையாறு ஆற்றில் கரை புரண்டு ஓடிய வெள்ளம் ஓரளவு குறைந்தது. இதனால் சைதாப்பேட்டை பாலத்தை மூழ்கடித்து சென்ற வெள்ளம் இப்போது குறைந்து பாலத்துக்கு கீழே தான் தண்ணீர் செல்கிறது.

இதன் காரணமாக அந்த பாலத்தில் மீண்டும் போக்குவரத்து தொடங்கி உள்ளது.

இதே போல் போரூர் ஏரியில் வழிந்தோடும் தண்ணீரும் குறைந்து வருவதால் போரூர் சுற்றுப்புற பகுதியில் வெள்ளம் வடிந்து வருகிறது.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மக்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய தயார்; அமெரிக்கா அறிவிப்பு**



வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மக்களுக்கு தேவையான அனைத்து உதவியையும் செய்ய தயாராக உள்ளதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வாஷிங்டன் நகரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சக துணை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர் கூறியுள்ளதாவது:- பல ஆண்டுகளில் இல்லாத, மிகவும் மோசமான வெள்ளத்தில் சிக்கியுள்ள சென்னை மக்களுக்கு உதவி செய்ய அமெரிக்காக அரசு தயார்நிலையில் உள்ளது. இந்த வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த மக்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இன்னும் சிக்கித்தவிக்கும் மக்கள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்துவாடும் மக்களைச் சுற்றி எங்களது எண்ணங்கள் சூழ்ந்துள்ளன.

இந்த இக்கட்டான வேளையில் உதவுவதற்காக இந்திய அரசுடன் அமெரிக்க அரசு தொடர்ந்து தொடர்பில் உள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு எல்லாவித உதவியையும் செய்ய அமெரிக்கா தயார்நிலையில் இருப்பதாக நாங்கள் தெரிவித்துள்ளோம்.

இதுவரை எங்களிடமிருந்து எந்த உதவியையும் இந்திய அரசு கேட்கவில்லை. இதுபோன்ற வேளைகளில் அவசர உதவி மற்றும் பொதுச்சேவை நிலவரங்களை சுயமாக கையாளக்கூடிய அளவுக்கு இந்திய அரசு மிகவும் மேம்பாடு எய்தியுள்ளபோதிலும், குறிப்பாக, இந்தியாவைப்போன்ற வலிமையான நட்பு நாடுகளுக்கு பேரழிவுக்குப் பிந்தைய அனைத்து உதவிகளையும் செய்யவும் அமெரிக்க அரசு தயாராகவே உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**தமிழகத்துக்கு ரூ.5 கோடி நிவாரண நிதி: பீகார் முதல்வர் நிதிஷ்குமார் காசோலை அனுப்பினார்**



பீகார் முதல்வர் நிதிஷ்குமார் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்துக்கு வெள்ள நிவாரண நிதியாக ரூ.5 கோடிக்கான காசோலையை வழங்கியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்:- தமிழகத்தைப் போல பீகார் மாநிலம் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்களின் சோகத்தை பீகார் மக்களும் பகிர்ந்து கொள்வார்கள். வெள்ளத்தால் உயிர்களை இழந்து வாடும் அவர்களின் குடும்பத்தினருக்கும், உடைமைகளை இழந்து தவிக்கும் மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறேன். அவர்களுக்கு முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 5 கோடிக்கான காசோலையை அனுப்பியியுள்ளேன்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தலைமையில் தமிழகம் மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்பும் என நான் உறுதியாக நம்புகிறேன். துணை முதல்-மந்திரி தேஜஸ்வி யாதவ் தன்னுடைய முதல் மாத சம்பளத்தை தமிழக வெள்ள நிவாரண நிதியாக வழங்க முன் வந்துள்ளார். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**உடனடி நிவாரணமாக ரூ.5,000 கோடி வழங்குக: மோடியிடம் ஜெயலலிதா நேரில் கோரிக்கை**



தமிழகத்தில் மழை, வெள்ள பாதிப்புகளை சரி செய்ய உடனடி நிவாரணமாக ரூ. 5,000 கோடி வழங்க வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு இன்று வெளியிட்ட செய்திக்குறிப்பில், "தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பிரதமர் நரேந்திர மோடியும், முதல்வர் ஜெயலலிதாவும் வியாழக்கிழமை பார்வையிட்டனர். பிறகு பிரதமர் மோடியை சந்தித்து மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை விளக்கினார். தமிழக அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நிவாரணப் பணிகளையும் எடுத்துரைத்தார். தமிழகத்தில் மழை, வெள்ளத்தால் பாதிப்புகள் மிகக் கடுமையாக இருப்பதால் மீட்பு, நிவாரணப் பணிகளுக்கு உடனடியாக ரூ. 5 ஆயிரம் கோடி வழங்க வேண்டும் என பிரதமரிடம் முதல்வர் ஜெயலலிதா

கோரிக்கை விடுத்தார். அதனை ஏற்று உடனடியாக ரூ. 1,000 வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார். தமிழகத்துக்கு கூடுதலாக 10 ராணுவ குழுக்களையும், 20 தேசிய பேரிடர் மீட்புப் படை குழுக்களையும் அனுப்ப வேண்டும் என்ற முதல்வரின் கோரிக்கையையும் பிரதமர் ஏற்றுக் கொண்டார். இதற்காக பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா நன்றி தெரிவித்தார்" என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் மழையால் தொற்று நோய் பரவும் அபாயம்: தமிழகம் முழுவதும் இருந்து மருத்துவக் குழுக்கள் விரைவு




சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் பொது மக்கள், குழந்தைகளுக்கு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் அவர்களுக்கு தற்காலிக மருத்துவ முகாம்களுக்கு ஏற்பாடு செய்து மருத்துவ சிகிச்சை அளிக்க தமிழகம் முழுவதும் இருந்து மருத்துவர்கள், செவிலியர்கள் அடங்கிய குழுவினர் நேற்று அனுப்பப்பட்டுள்ளனர். சென்னை, கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் கனமழையால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மழைநீருடன் கழிவுநீர் தேங்கியதால் பொதுமக்கள், குழந்தைகளுக்கு தொற்று நோய் வேகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகளையும் மழைநீர் சூழ்ந்ததால் புறநகர் மக்கள் மருத் துவ சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சென்னை மற்றும் சுற்றுவட்டார மருத்துவ நலப்பணிகள், சுகாதாரத் துறை மருத்துவர்கள், செவிலியர் மற்றும் மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு

தொற்று நோய் பரவுவதை முழுமையாக தடுக்கவும், பாதிக்கப்பட்ட மக் களுக்கு சிகிச்சை அளிக்கவும் முடிய வில்லை. அதனால், தமிழகம் முழு வதும் ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் சுகாதாரத் துறை மருத் துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களை சென் னைக்கு நேற்று முன்தினம் இரவே அவசரமாக அனுப்பி வைக்குமாறு மாவட்ட சுகாதாரத் துறை துணை இயக்குநர்களுக்கு உத்தரவு வந்தது. இதையடுத்து, சுகாதாரத் துறை துணை இயக்குநர்கள், ஒவ்வொரு வட்டாரத்திலும் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதாரநிலையங்கள், துணை சுகாதாரநிலையங்களில் பணி புரியும் மருத்துவர்கள், செவிலியர் களை, வாகன ஓட்டுநர்களை அழைத்து நாளை காலை (நேற்று காலை) உடனடியாக சென்னைக்கு புறப்பட்டு செல்லத் தயாராக இருங்கள் என்று உத்தரவிட்டனர். அதன்படி, நேற்று காலை அவர்கள் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் சென்னைக்கு தனி வாகனங்களில் புறப்பட்டுச் சென்றனர். மதுரை மாவட்டத்தில் இருந்து அதிகபட்சமாக 18 மருத்துவர்கள், 18 செவிலியர்கள், 15 வாகனங்களுடன் ஓட்டுநர்கள் அடங்கிய 13 குழு வினர் ரூ.10 லட்சம் மதிப்புள்ள மருந்து, மாத்திரைகளுடன் சென்னை புறப்பட்டு சென்றுள்ளனர். இதேபோல் சேலத்திலிருந்தும் சேலம் சுகாதார துறை துணை இயக்குநர் ஜெகதீஷ் குமார் தலைமையில் 10 மருத்துவர்கள் கொண்ட குழுவினர், மருந்து பொருட்களுடன் நேற்று காலை சேலத்தில் இருந்து சென்னைக்கு புறப்பட்டனர்.

**460 முகாம்களில் 1 லட்சத்து 64 ஆயிரத்து 636 பேர் தங்கவைப்பு: முதல்வர் ஜெயலலிதா அறிக்கை**



கடலூர், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூரில் மொத்தம் 460 முகாம்களில் 1 லட்சத்து 64 ஆயிரத்து 636 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக முதல்வர் ஜெய லலிதா வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வங்கக் கடலில் ஏற்பட்ட காற்ற ழுத்த தாழ்வு நிலையில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்கள் மிக கடுமை யாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் போர்க்கால அடிப்படை யில் மீட்பு, நிவாரணப் பணிகள் நடை பெற்று வருகின்றன. வியாழக்கிழமை நிலவரப்படி (நேற்று) கடலூர், சென்னை, காஞ்சி புரம், திருவள்ளூரில் மொத்தம் 460 முகாம்களில் 1 லட்சத்து 64 ஆயிரத்து 636 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மாவட்டங்களில் 41 லட்சத்து 96 ஆயிரத்து 436 உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியில் 470 பம்புசெட்டுகள் 75 அதிக திறன் கொண்ட நீர் உறிஞ்சும் இயந்திரங்கள், 82 ஜேசிபி, பொக்லைன் மூலம் நீர் வெளியேற்றும் பணிகள் நடந்து வருகின்றன. போக்குவரத்தை சரி செய்ய சுரங்கப் பாதைகளில் உள்ள நீரை வெளியேற்றும் பணி நடந்து வருகிறது. மழைநீர் வடிந்த பிறகு மின் விநியோகம் படிப்படியாக சீர் செய்யப்படும். நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர். 24 தேசிய பேரிடர் மீட்புப் படை குழுக்கள் 9 ராணுவ குழுக்கள், 200 கடற்படை வீரர்கள், மாநில பேரிடர் மீட்புக் குழுவினர், கடலோர காவல் படையின் 3 குழுக்கள், தமிழக காவல் துறையின் 60 பயிற்சி பெற்ற வீரர்கள் இரவு பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். திருட்டுகள் நடக் காமல் தடுக்க காவல் துறையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். முகாம்களில் உள்ளவர்களுக்கு ஆவின் பால் பவுடர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு முதல்வர் தெரி வித்துள்ளார்.

**புதுச்சேரிக்கு 2 பேரிடர் மீட்புக்குழுக்கள் ஒடிசாவிலிருந்து வருகை: டிச.6 வரை கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை**



புதுச்சேரிக்கு இரு பேரிடர் மீட்புக்குழுக்கள் ஒடிசாவிலிருந்து இன்று வந்தன. தொடர் மழையால் வரும் டிச. 6 (ஞாயிறு) வரை பள்ளி, கல்லூரி உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் ஏற்கெனவே புதுவையில் கடந்த ஒரு மாதமாக தொடர் மழை பெய்தது. இதனால் 400-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. 7 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் சேதமடைந்தன. மழை நிவாரணமாக ரூ.182.45 கோடி கோரி முதல்வர் ரங்கசாமி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதினார். இந்நிலையில் வங்கக் கடலில் மீண்டும் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் கடந்த 3 நாட்களாக புதுச்சேரியில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அனைத்து ஆறுகள், ஏரிகள், நீராதாரங்களில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. 173 நிவாரண மையங்களில் பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புதுவையில் மழை நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் 2 பேரிடர் மீட்புக் குழுக்களை அனுப்ப வேண்டும் என துணைநிலை ஆளுநர் ஏ.கே.சிங், முதல்வர் ரங்கசாமி ஆகியோர் மத்திய உள்துறை அமைச்சகத்திடம் கேட்டனர்.

இதன்படி 2 பேரிடர் மீட்புக் குழுக்கள் ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் இருந்து அரக்கோணம் ராஜாளி கடற்படை விமான தளத்துக்கு வந்தன. அங்கிருந்து

அவர்கள் இன்று புதுவைக்கு வந்தனர். புதுவை கோரிமேட்டில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். துணை காவல் கண்காணிப்பாளர் பிகே.தாஸ் தலைமையில் 2 இன்ஸ்பெக்டர்கள், 4 எஸ்.ஐ, 66 மீட்பு படையினர் என 73 பேர் கொண்ட குழுவினர் வந்துள்ளனர்..

புதுச்சேரி கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள மாநில அவசர கால மீட்பு மையத்தில் பேரிடர் மீட்புக் குழு அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

டிஐஜி கண்ணன் ஜெகதீசன், சீனியர் எஸ்.பி. சந்திரன், ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர் பார்த்திபன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். இதில் புதுச்சேரி மாநிலத்தில் எங்கு பேரிடர் குழுவினரை மீட்புப் பணியில் ஈடுபடுத்தலாம் என ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு பின் டிஐஜி கண்ணன் ஜெகதீசன் கூறியதாவது:

" 4 படகுகள் உட்பட நவீன கருவிகளுடன் பேரிடர் மீட்புக் குழுவினர் புதுவை வந்துள்ளனர். தீவிர பாதிப்பு உள்ள இடங்களில் அவர்கள் பயன்படுத்தப்படுவர். காரைக்காலில் கன மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், அப்பகுதிக்கும் ஒரு மீட்புக் குழு தேவைப்பட்டால் அனுப்பி வைக்கப்படும்" என்று குறிப்பிட்டார்.

**டிசம்பர் 6 வரை விடுமுறை**

புதுச்சேரியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை (டிச. 6) புதுச்சேரி, காரைக்காலில் உள்ள பள்ளி, கல்லூரி உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

தமிழக பேரிடரை சமாளிக்க எல்லா உதவியும் வழங்கப்படும்: மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் உறுதி



பலத்த மழையால் தனி தீவானது சென்னை

கனமழையால் வெள்ளக்காடாகி யுள்ள சென்னை தனி தீவு போல காட்சி அளிக்கிறது. அதன் வெள்ள பாதிப்பால் பாழாகியுள்ள சென்னை நகரின் நிலைமை மிகவும் அச்சமூட்டுவதாக இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று தெரிவித்தார். தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரப் பிரதேசத்தில் கன மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை தொடர்பாக மக்களவையில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் ராஜ்நாத் சிங் பதில் அளித்து பேசியபோது கூறியதாவது: அனைத்து மாநில, தேசிய நெடுஞ்சாலைகளும் வெள்ளத் தால் துண்டிக்கப்பட்டு சென்னை நகரமானது தனிதீவு போல் நிற் கிறது. சென்னை மாநகரில் மிகப் பெரிய அளவில் பேரழிவு ஏற்பட்டுள் ளது. உறுப்பினர்களின் வேதனை புரிகிறது. கடந்த 100 ஆண்டில் இல்லாத அளவுக்கு இடைவிடாது கன மழை பெய்து, முன்னெப் போதும் இல்லைத நெருக்கடியான நிலையில் சென்னை உள்ளது.

டிசம்பர்-2ம் தேதி காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் 330 மில்லிமீட்டர் மழை சென்னையில் பெய்துள்ளது. பொதுவாக டிசம்பர் முழுவதிலுமே 250 மிமீ மழைதான் பெய்யும். இதுதான் உண்மை நிலவரம்.

தமிழகத்தில் 269 பேர், புதுச்சேரி யில் 2 பேர், ஆந்திரத்தில் 54 பேர் கனமழைக்கு பலியாகி உள்ளனர். கடற்படையிலிருந்து 12 படகு கள், 155 வீரர்கள் மீட்பு நடவடிக் கையில் இறக்கிவிடப்பட்டுள்ளனர். தேசிய பேரிடர்

மீட்பு படையி லிருந்து 14 குழுக்களை அனுப்பி விமானப்படையும் மீட்பு பணியில் இறங்கியுள்ளது. மாநில அரசு நிவாரண நிதியாக மத்திய அரசிடம் ரூ. 8481 கோடி கோரியுள்ளது. மத்தியஅரசு ரூ 940.92 கோடி வழங்கியுள்ளது.

மழை, வெள்ளச்சேதம் தொடர் பாக மத்திய குழு விரைவில் அறிக்கை தரும் என எதிர்பார்க் கப்படுகிறது. அது கிடைத்தவுடன் கூடுதல் நிதி உதவி வழங்கப்படும்.நிலைமையின் தீவிரத்தை புரிந்து பிரதமர் மோடியும் நானும் தமிழக முதல்வருடன் தொடர்பு கொண்டு பேசினோம். ஆந்திர முதல்வர், புதுவை முதல்வருடனும் நான் தொடர்புகொண்டு பேசினேன்.

ஆந்திர அரசு 1,000 கோடி ரூபாய் இடைக்கால நிவாரணம் கோரியுள்ளது, விரைவில் அங்கு மத்தியகுழு சென்று பார்வையிடும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிலையில் மேற்கு வங்கத் துக்கு ரூ.387 கோடி நிவாரண உதவி வழங்கப்படுவதாக ராஜ்நாத் சிங் கூறியபோது திரிணமூல் காங்கிரஸ் தொண்டர்கள் கோபமுற்று வெளி நடப்பு செய்தனர்.

**வெங்கய்ய நாயுடு உறுதி**

மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் வெங்கய்ய நாயுடு நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தின் வெள்ள நிலைமை குறித்து பிரதமர் மற்றும் உள் துறை அமைச்சரிடம் பேசியுள்ளேன். மத்திய அரசு அனைத்துவிதமான உதவிகளையும் வழங்கி வருகிறது. இந்த உதவி தொடரும். கடற் படை, ராணுவ உதவியும் வழங்கப் பட்டுள்ளது. ஹெலிகாப்டர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள் ளன. இந்த உதவியை, நிலைமை சற்று மேம்பட்டால்தான் அளிக்க முடியும். எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் சென்று உதவு கிறோம். மக்கள் அங்கு நல்ல நிலையில் இல்லை. முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. மக்கள் வீட்டை விட்டு வெளியே வந்துள்ளனர். ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அதிக அளவு பாதிக்கப் பட்டுள்ளனர். இயன்ற அனைத்து உதவிகளையும் அரசு செய்து வருகிறது. சென்னைவாசிகள் ஒரு வருக்கொருவர் உதவிவருவதை பாராட்டுகிறேன்" என்றார்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக டி.எஸ். தாக்கூர் பதவியேற்பு



உச்ச நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக டி.எஸ்.தாக்கூர் நேற்று பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த ஹெச்.எல்.தத்து நேற்று முன்தினம் ஓய்வுபெற்றார். அவரையடுத்து மூத்த நீதிபதியாக உள்ள தீரத் சிங் தாக்கூர்(63) புதிய தலைமை நீதிபதியாக தேர்வு செய்யப் பட்டார். டெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள தர்பார் ஹாலில் நேற்று நடந்த விழாவில் உச்ச நீதி மன்றத்தின் 43வது தலைமை நீதிபதி யாக அவர் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

**பிரதமர், அமைச்சர்கள் பங்கேற்பு**

எளிமையாக நடந்த விழாவில், பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத்சிங், சுஷ்மா ஸ்வராஜ், அருண் ஜெட்லி, சதானந்த கவுடா, ஹர்ஷ் வர்தன், ஸ்மிருதி இரானி மற்றும் பாஜக மூத்த தலைவர் எல்.கே.அத்வானி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நீதிபதியின் மகன்**

புதிய தலைமை நீதிபதியாக பொறுப் பேற்றுக் கொண்டுள்ள டி.எஸ்.தாக்கூரின் தந்தை தேவி தாஸ் தாக்கூர் ஜம்மு காஷ்மீர் மாநில துணை முதல் வராக

இருந்தவர்; சட்ட நிபுணர். ஜம்மு காஷ்மீர் மாநில உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் இருந்தவர். தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்கூர்19 72-ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்தார். அவரது தந்தையிடம் ஜூனியராக பணியாற்றினார். 90-ம் ஆண்டு மூத்த வழக்கறிஞரானார். 94-ம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மாநில உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டு பின்னர் கர்நாடக உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டார். 95-ம் ஆண்டு நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்பட்டு டெல்லி உயர் நீதிமன்றத்துக்கு 2004-ல் மாற்றப் பட்டார். அங்கு தற்காலிக தலைமை நீதிபதியாக பொறுப்பு வகித்தார். 2008-ல் பஞ்சாப் மற்றும் ஹரியாணா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டு, 2009-ல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

**தமிழகத்திற்கு மேலும் ரூ. 1000 கோடி நிவாரணம்: பிரதமர் மோடி அறிவிப்பு!**

இந்நிலையில், இன்று காலை தனி விமானம் மூலம் முதலமைச்சர் ஜெயலலிதா வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் வெள்ள நிவாரணம் குறித்து அவர் ஆலோசனை நடத்தினார். இந்நிலையில், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகளை பார்வையிடுவதற்காக இன்று காலை டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் பிரதமர் நரேந்திர மோடி அரக்கோணத்தில் உள்ள விமானப்படை தளத்திற்கு வந்தார். அங்கிருந்து அடையாறு வந்த பிரதமர் நரேந்திர மோடியை, முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் ஆளுநர் ரோசய்யா ஆகியோர் வரவேற்றனர்.








அதைத் தொடர்ந்து, முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் ஆலோசனை நடத்திய பிரதமர் நரேந்திர மோடி, செய்தியாளர்களிடம் கூறுகையில் "வெள்ள சேதத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்திற்கு ஏற்கனவே, மத்திய அரசு சார்பில் ரூ.939.53 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது வெள்ள சேதம் அதிகமாக இருப்பதால், தமிழகத்திற்கு கூடுதலாக ரூ.1000 கோடி நிதி உடனடியாக வழங்கப்படும்" என்றார்.

**வெள்ள சேத நிலவரங்களை பார்வையிட தமிழகம் வந்தார் பிரதமர் மோடி!**



**சென்னை:** கனமழையால் சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து நகரங்களும் வெள்ளத்தில் மூழ்கி, மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கின்றனர். சென்னை சுற்று வட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் இடைவிடாமல் கனமழை கொட்டியதால் சென்னை நகரமே வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. பஸ், ரயில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலையில், சென்னையில் வெள்ளச் சேதப்பகுதிகளில் இந்திய ராணுவம் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதனிடையே, தமிழக நிலவரங்களை பார்வையிட பிரதமர் மோடி சற்றுநேரத்திற்கு முன் பிரத்யேக விமானத்தில் அரக்கோணம் ராஜாளி ராணுவ விமான தளத்திற்கு வந்திறங்கினார். அங்கு அவருக்கு அரசு அதிகாரிகள், சென்னையின் மீட்பு நிலவரங்களை படங்களுடன் விவரித்தனர். காலநிலை சற்று சரியில்லாத நிலையில், ஒரு மணிநேர ஓய்வுக்கு பிறகு சென்னை புறப்படும் பிரதமர் மோடி, தனி ஹெலிகாப்டர் மூலமாக மாலை நான்கரை மணிக்கு சென்னைக்கு வருவார் எனக் கூறப்படுகிறது.

**வெள்ள சேத பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டார் ஜெயலலிதா!**

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் முதலமைச்சர் ஜெயலலிதா இன்று ஹெலிகாப்டர் மூலம் சுமார் 40 நிமிடங்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இதற்காக அவர் போயஸ் கார்டன் வீட்டில் இருந்து காலை 10.30 மணிக்கு புறப்பட்டார். நேப்பியர் பாலம் அருகே ராணுவ குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள ஐ.என்.எஸ். அடையார் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹெலிகாப்டரில் சென்ற அவர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள கோட்டூர்புரம், அடையார், வேளச்சேரி, பெரும்பாக்கம், ஊரம்பாக்கம், தாம்பரம், முடிச்சூர், வரதராஜபுரம், விமானநிலையம், பல்லாவரம், ஈக்காட்டுத்தாங்கல், அசோக்நகர், திருவொற்றியூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய இடங்களை பார்வையிட்டார்.

மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் சடையான்குப்பம், மணலி புதுநகர், ரெட்டை ஏரி, புழல், கொசஸ்தலை ஆறு, பூண்டி ஏரி மற்றும் செம்பரம்பாக்கம் ஏர் ஆகிய பகுதிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சென்னை தலைமை செயலகத்தில் உயரதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, மழை வெள்ள பாதிப்புகள் குறித்தும், நிவாரணப்பணிகள் குறித்தும் ஆலோசித்ததாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேலும் 48 மணி நேரத்திற்கு தமிழகத்தில் கனமழை எச்சரிக்கை!**



**சென்னை:** தமிழகத்தில் அடுத்த 48 மணி நேரத்திற்கு கடலோர பகுதிகளில் கன மழை பெய்யும் வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை மைய இயக்குனர் ரத்தோர் தெரிவித்துள்ளார்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால் சென்னை உள்ளிட்ட நகரங்களின் இயல்பு நிலை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

சென்னையின் பல பகுதிகள் வெள்ளக்காடாக மாறி மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. இதனிடையே அடுத்த 48 மணி நேரத்திற்கு கடலோர தமிழக பகுதிகளில் கன மழை பெய்யும் வாய்ப்புள்ளது. அதன்பிறகு மழையின் தாக்கம் குறையும் இருப்பினும், மழை முற்றாக நிற்காது. 6 நாட்களாவது மழையின் தாக்கம் நீடிக்கும் என இந்திய வானிலை மைய இயக்குனர் ரத்தோர் கூறியிருக்கிறார்.